1-8-'53

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

79

14 OCT 1953

(12)



கேட்டீர்களா!

அதிசயப் பெண்மணி

எட்டு வருஷங்களாக அன்ன ஆகாரம், தண்ணீர் எதுவும் இல்லாமல் மாணிக்க அம்மாள் என்ற பெண்மணி இருக்கிருளாம். இவள் ஹைதராபாத்தில் யானகுண்ட என்ற இடத்தில் தற்பொழுது இருக்கிருள். இவள் ஆந்திரக் குடியானவக் குடும்பத்தைச் சேர்ந்தவள். சதா தியானமும் பூஜையும்தான் வேலே. வயது 23 ஆகிறது. பார்க்க வருப்வர்களிடம் மிகவும் அன்பாகப் பேசுகிருளாம்; இந்த அதிசயப் பெண்மணி!

உலகிலேயே பெரிய தாத்தா

பாதன்கோட்டையில் இருக்கும் பாபா நாராயண் சிங் என்பவருக்கு 176 வயதாகிறது உலகிலேயே இவர்தான் அதிக வயது ஜீவித்திருக்கிறவர். அவர் இன்னும் 25 வருஷகாலம் உயிருடன் இருப்பேன் என்று கூறுகிருர். திடமாக நடக்கிருர். எல்லாவற்றையும் விட ஆச்சரியம், தாத்தா ஆனதும் நரைத்துப் போயிருந்த தலே மயிர் எல்லாம் வரவர, கறுத்து வருகிறதுதான்!

கடல் கடந்த காண்டாமிருகம்

இந்தியாவிலிருந்து ஒரு காண்டாமிருகம் அமெரிக்க மிருகக் காட்சிச் சாலேக்குப் போயிருக்கிறது. இதன் வயது 5. எடை சுமார் ஒரு டன். துப்பாக்கி எதுவும் இல்லாமல் பொய்க் குழி வெட்டி வைத்து இந்தக் காண்டாமிருகத்தைப் பிடித்திருக்கிருர்கள்.

மலே விழுங்கி!

பம்பாய் மிருகக் காட்சிச் சாலேயில் திடீரென்று செவ்வாய்க் கிழமை ஒரு மலேப் பாம்பு காணப்படவில்லே. அதிகாரிகள் எல்லாரும் தேடினுர்கள். காட்சிச் சாலேயின் ஒரு மூலேயில் ஏற்றச் சால்போல் உடலேப் போட்டுக்கொண்டு ஒரு மலேப் பாம்பு சாய்ந்து கிடந்ததைப் பார்த்தார்கள். வேருெரு சிறிய மலேப் பாம்பு ஒரு முயல் குட்டியை விழுங்கியபோது இந்தப் பெரிய மலேப் பாம்பு பார்த்திருக்கிறது இதற்கு அகோரப் பசிபோலும்! அந்த மலேப் பாம்பையும் முயல் குட்டியுடன் சேர்த்து அப்படியே விழுங்கிவிட்டது. ஆனல் சற்று நேரத்திற்கெல்லாம் பெரிய பாம்பு, முயல் குட்டியையும் சிறிய பாம்பையும் கக்கிவிட்டது. அதன் பிறகுதான் என்ன நடந்திருக்கிறது என்பது தெரிந்தது.

தந்திக் கம்பிகள்

உலகத்திலேயே மிக அதிக தூரத் தந்திப் பாதைகள் உள்ள நாடுகளில் இந்தியா மூன்ருவது ஸ்தானம் வகிக்கிறது. பூமிக்கடியிலும் பூமிக்கு மேலும் செல்லும் தந்திக் கம்பிகளின் மொத்த நீளம் 2,44,931 மைல்களாகும். உள்நாட்டுத் தந்திப் போக்கு வரத்து விஷயத்தில் இந்தியா ஆருவது இடம் வகிக்கிறது. சராசரியாக இந்தியாவில் வருஷம் ஒன்றுக்கு 245 லட்சம் தந்திகள் அனுப்பப் படுகின்றன.

மலர்: 4 இதழ்: 9

1 - 8 - '53

குழந்தைகளே! பக்கம் .. 2
குற்றவாளி யார்? - (பரிசுக் கதை) .. 3
ஓய்ந்த வேளையில் .. 9
வியாழன் .. 10
விசித்திர வியாபாரம் .. 13
பாட்டு எப்படி? .. 18
எட்டு எட்டு ஆயிரம் .. 19
ராஜாக் கதை .. 21
ஆமையும் கழுகும் .. 24
எறும்பின் கதை .. 25
உத்திதபாதாஸனம் .. 29
கண்ணன் கழக அங்கத்தினர்கள் .. 31
மாஸ்டர் பாலகுமார் - (சித்திரக் கதை) .. 33
அசட்டுப் பிச்சு .. 36
உங்கள் சந்தேகங்கள் .. 40

வருஷ சந்தா ரூ. 3/-
கலைமகள், மஞ்சரி, கண்ணன்
மூன்றும் சேர்ந்த
குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

கிரிக்கெட்:

ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்கும் நடந்த முதலிரண்டு டெஸ்ட்டுகள் 'ட்ரா'வாயின. மூன்றாவது டெஸ்ட்டும் மழையினால் இப்போது 'ட்ரா'வாகிவிட்டது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸை ஆரம்பித்தது. ஹார்வே மட்டும் அபாரமாக விளையாடி 'ஸெஞ்சரி' போட்டிருக்கா விட்டால், ஆஸ்திரேலியாவின் கதி அதோகதிதான்!

இங்கிலாந்தும் தன் முதல் இன்னிங்ஸில், முதலிரண்டு விக்கட்டுகளை மிகச் சொல்பமான ரன்களுக்கு இழந்துவிட்டது, ஆனால், ஹட்டனும் காம்ப்டனும் பிரமாதமாக விளையாடி இங்கிலாந்தைக் காப்பாற்றினர். இங்கிலாந்து எப்படியோ திணறித் தத்தளித்து 276 ரன்களை எட்டிப் பிடித்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலியக் கோஷ்டிக்கு எட்டு விக்கட் நஷ்டத்திற்கு 35 ரன்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! அவமானம்!

நாலாவது டெஸ்ட்டுக்கான இங்கிலாந்துக் கட்சியில் ஸ்டாதம், லாக் இருவரும் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். வார்டில், ட்ரூமன் இருவரும் டெஸ்ட் கட்சியிலிருந்து தள்ளப்பட்டிருக்கின்றனர். 'ஆஸ்திரேலியரை அலற அடிக்கப் போகும் ட்ரூமன்' என்றெல்லாம் புகழ்ந்த அதிசய பௌலர் ட்ரூமன் முன்னுக்கு வந்த வேகத்திலேயே, வெளியேயும் சென்றுவிட்டது வருந்தத்தக்கது. முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 167 ரன்கள் எடுத்தது. ஆஸ்திரேலியா 266 ரன்கள் எடுத்து ஆல் அவுட்டாகியது.

—எஸ். ராமஸ்வாமி.

குழந்தைகளே!

இந்த இதழைப் பிரித்ததுமே நீங்கள் பிரமித்துப் போய்விடுவீர்கள்! எதை முதலில் படிப்பது, எதை முதலில் பார்ப்பது என்று மலைப்பீர்கள்! இது நிஜம். ஏனென்றால் முப்பது ரூபாய்ப் பரிசுக் கதைப்போட்டியில் முதல் பரிசுபெற்ற கதை எடுத்ததுமே வெளியாகியிருக்கிறது. அடுத்தபடியாக நீங்கள் வெகு நாளாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த சித்திரக் கதை இந்த இதழில் முழக்கத்துடன் ஆரம்பமாகியிருக்கிறது. அசட்டுப் பிச்சு மீண்டும் ஒரு பெரிய சிக்கலில் மாட்டிக்கொண்டுவிட்டதைப் படத்தைப் பார்த்ததுமே தெரிந்துகொண்டு விடுவீர்கள்! இன்னும் உங்கள் ருசிக்கேற்ற கதைகள் வெளியாகியிருக்கின்றன. இவற்றில் எதைத்தான் முதலில் படிக்கப்போகிறீர்களோ, எனக்குத் தெரியவில்லை! உங்கள் சௌகரியப்படி செய்யுங்கள்.

கதைப் போட்டியில் முதல் பரிசைத் தட்டிக்கொண்டு போன சிரஞ்சீவி ஜி. ஜயராமனுக்கு நம் வாழ்த்துக்கள். இதே குழந்தை முன்பு வியூமாஸ்டர் பரிசுப்போட்டியில் பாராட்டுப் பரிசு பெற்றவன் என்று தெரிகிறது. அவனுடைய கண்ணன் கழக நம்பர் J. 28; வயது 15. இரண்டாவது பரிசு பெற்றவன் சிரஞ்சீவி N. சீனிவாசன், மதுரை. (கண்ணன் கழக நம்பர் S. 406; வயது 15). இவனுக்கும் நம்முடைய வாழ்த்துக்கள். பாராட்டுப் பரிசுக்குரியவையென, குமாரி சி. வசுமதி (க.க.V. 23) என்பவளுடைய கதையையும், வி ஆர். பாலன் (க.க.B. 226) என்பவனுடைய கதையையும் தேர்ந்தெடுத்துள்ளோம். அடுத்த இதழில் இரண்டாவது பரிசு பெற்ற கதை வெளிவரும். தொடர்ந்து மற்ற இரண்டு கதைகளும் பின்னர் வெளியாகும். மேலும் சிறப்பாக எழுதியிருப்பவர்கள் வருமாறு: ஆர். விசுவநாதன், மேட்டூர் அணை; எச். அன்னபூர்ணை, பழகரங்கபுரம்; எஸ். இந்திராதேவி, கருகம்பனை; எஸ். கிருஷ்ண ரமி, தி. நகர்; பாலாஜி விசுவநாதன், நாகபுரி; கே. குமார், அகமதாபாத்; பி. எம். செல்வராஜன், திருச்சி; ஸி. ஆர் ரத்தன்; கே. எஸ். ஜயா, புதுடில்லி. இவர்களுடைய கதைகளை வெளியிட இயலாத போதிலும் இவர்களுக்கு நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தப் போட்டிக்கு மொத்தம் 627 கதைகள் வந்திருந்தன. கதைகளை நம்பிக்கையுடன் எழுதி அனுப்பிய எல்லாக் குழந்தைகளையுமே நான் வாழ்த்திப் பாராட்டுகிறேன். ஒரே போட்டியில் எல்லாரும் பரிசு பெறுவது என்பது சாத்தியமா? ஒன்றில் இல்லாவிட்டால் இன்னொன்றில் கிடைத்துவிட்டுப் போகிறது!

எதற்கும் தளராத ஊக்கமே தேவை. அந்த ஊக்கம் குன்றாமல் உங்களுக்கு மேலும் மேலும் நம்பிக்கை வளரவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

சித்திரக் கதையில் பத்து வயதுச் சிறுவன் ஒருவன் ஸினிமாவில் நடித்துப் பெரும் புகழ் பெற்றிருக்கிறான் அவனைப்பற்றிய இந்தக் கதை ஒவ்வோர் இதழிலும் உங்களைத் திகைப்பில் ஆழ்த்தக் கூடி இந்தக் கதையை ஓவியர் ஸாமி பிரமாதமாகத் தீட்டி வருகிறார். யது. கதையும் படங்களும் உங்கள் கருத்தைக் கவர்ந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ஆசிரியர்

ஜய் ஹிந்த்!

<u>முதற் பரிசு பெற்ற கதை</u>

குற்றவாளி யார்?

ஜி. ஜயராமன்

(கண்ணன் கழகம் J. 28; வயது 15.)

போலீஸ் இன்ஸ்பெக்டர் சாமர்த்தியம் கெடியாரத்தைப் பார்த்தார். மணி ஆறரை. அப்போது ஒரு பையன் இரைக்க இரைக்க ஓடி வந்து, "ஸார் ஸார்! மில் ராமசாமியின் வீட்டில் ஒரு கேஸ். உடனே புறப்படுங்கள்!" என்று சொல்லிவிட்டு ஓடிப்போனான். அடுத்த ஐந்தே நிமிஷத்தில் ஸ்ரீமான் சாமர்த்தியம் மில் ராமசாமியின்வீட்டில் நுழைந்தார். வாசலில் ஒரு சடைநாய்மட்டும் அவரைப் பார்த்துக் குரைத்தது. மாடிப்படியில் எறும்போது ஒரு கிழிந்த கவர் கிடப்பதை அவர் கண்டார். உடைந்து கிடந்த கண்ணாடி ஜன்னல்தான் முதலில் அவர் கவனத்தைக் கவர்ந்தது. அறை எங்கும் கண்ணாடித்துண்டுகள் சிதறிக்கிடந்தன. அலமாரி திறந்தபடி கிடந்தது. அதில் இருந்த சாவிகூட அகற்றப்படவில்லை. கூஜாவும் டம்ளர்களும் அலமாரியில் வைத்தபடியே இருந்தன. அங்கே இருந்த பெட்டி மூடியிருந்தது. வட்ட மேஜைமேல் தங்கம் சாய்ந்துகொண்டிருந்தாள். அவளது கைகளுக்கிடையில் ஒரு பெட்டி இருந்தது. அதில் பல வளையல்கள் இருந்தன. கீழே ஒரு கிரிக்கெட் பந்து விழுந்து கிடந்தது. ஜன்னல் பக்கமிருந்த ஸ்டூலும் சரிந்து கிடந்தது. மொத்தத்தில் அறையைப் பார்த்தால் ஒரு பெரிய அமர்க்களம் நடந்திருக்கிறது என்று நன்றாய்த் தெரிந்தது.

கொஞ்ச நேரத்தில் கறுப்பன் என்ற வேலைக்காரனும் சிவப்பன் என்ற சமையல்காரனும் வந்தனர். இன்ஸ்பெக்டர் விசாரித்தார்.

கறுப்பன் சொன்னான்: "நான் ஐந்து வருஷமாய் வேலை பார்க்கிறேன். எஜமானும் எஜமானியம்மாளும் குழந்தை தங்கத்தை விட்டு விட்டு, கல்யாணத்துக்காக அடுத்த ஊர் போயிருக்கிறார்கள். எஜமானுக்கு அடிக்கடி உடல்நலம் குன்றிவிடும். அதனால் இரவே திரும்பிவிடுவார்கள். ஆகவே நான்தான் வீட்டுக்குக் காவல். நான் சரியாகஐந்து மணிக்குக் குழந்தையைப் பார்த்தேன். 'நீ வீட்டுக்குப் போய் விட்டு விளக்கு வைக்குமுன் வந்துவிடு' என்றாள். நான்போய்விட்டு இப்போதுதான் வருகிறேன்."

அடுத்தபடியாகச் சிவப்பன் சொன்னான்: "ஐந்தரை மணிக்கு,

தங்கம் தண்ணீர் கொண்டு வரச் சொல்லி விட்டு மேலே போனுன். நான் ஒரு கிளாசில் தண்ணீர் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வந்தேன். ஆறு மணி சமயத்தில் மேலே எங்கள் வீட்டு நாய்குரைத்த சத்தம் கேட்டது. நான் பின்புற மைதானத்தில் நடந்துகொண்டிருந்த விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டதால் மேலே போகவில்லை. ஆனுல் சற்றுப் பொறுத்து மாடிவழியாக ஒரு பையன் இறங்கிப் போவதைப் பார்த்தேன். கால்தான் தெரிந்தது. பிறகு இப்போதுதான் வருகிறேன். இந்த வீட்டுக்குப் போன மாதம்தான் வேலைக்கு வந்தேன்.''

இன்ஸ்பெக்டர் எல்லாவற்றையும் கேட்டுத் தலையை ஆட்டிக் கொண்டார். விரைவாகக் கீழே இறங்கி வந்தார். போலீஸ் ஜவான் முன்னூற்றி எட்டைப் பார்த்து டாக்டர் துரைசாமியைக் கையோடு அழைத்துவரச்சொன்னுர்.வீட்டின் நாலுபுறமும் மதில்சுவர் இருந்தது. ஒரு புறம் சாலை; மற்றொரு புறம் ஒரு வீடு; மற்ற இரண்டு புறங்களிலும் பெரும் மைதானம். ஒரு மைதானத்தில் காலைந்து பையன்கள் கிரிக்கெட் மட்டையுடன் ஏதோ பேசியவாறு நின்றனர்.

''என்ன இருந்தாலும் நந்து, நீ அப்படிப் பந்தை அடித்திருக்கக் கூடாது'' என்ருன் ஒருவன். இன்ஸ்பெக்டர் அங்கிருந்தபடியே மாடியைப் பார்த்துவிட்டு ஒரு புன்முறுவலுடன் அங்கிருந்து உள்ளே திரும்பினுர்.

'வாசலிலிருந்து கொல்லைவரையில் எல்லாம் ஒழுங்காக இருக்கும் போது மாடி அறைமட்டும் அலங்கோலமாக இருப்பானேன்? ஒரு வேளை சிவப்பனே எதையாவது திருடியிருப்பானே? எது காணும் என்று தெரிந்தால்தானே ஏதாவது செய்யமுடியும்? ராமசாமி வந்து விட்டால் தேவலை! அல்லது தங்கமாவது மயக்கம் தெளிந்து எழுந்து விட்டால் தேவலை!'—இன்ஸ்பெக்டர் மேலே யோசிப்பதற்குள் வாசலிலே டாக்டர் துரைசாமியின் கார் வந்து நின்றது.

டாக்டர் தங்கத்தைப் பரீட்சை செய்து பார்த்துவிட்டு நிமிர்ந்தார். ''ஒன்றும் கவலையில்லை. தூக்க மருந்து சாப்பிட்டிருப்பதால் மயக்கம். கொஞ்ச நேரத்தில் எழுந்து விடுவாள்!'' என்ருர் துரைசாமி. இன்ஸ்பெக்டர் சற்று யோசனை செய்து விட்டு, ''நீங்கள்தானே ராமசாமியின் குடும்ப டாக்டர்?'' என்று கேட்டார். ''ஆமாம்; மிஸ்டர் ராமசாமிக்கு நான் தூக்க மருந்து சிபாரிசு செய்தேன். ஒரு வேளை அவர்தான் வைத்திருப்பார்'' என்ருர் துரைசாமி. இருவருமாகச் சேர்ந்து மெள்ளத் தங்கத்தைப் பக்கத்திலிருந்த ராமசாமியின் அறையில் படுக்க வைத்தார்கள். ''மேஜை மேல் 'மிக்சர்' இருக்கிறதே, இது எப்போது வாங்கியது?'' என்று விசாரித்தார் சாமர்த்தியம். ''ஆமாம்! இன்று காலையில் தான் ராமசாமி வந்து, தங்கத்துக்கு ஜலதோஷ ஜுரம் என்று வாங்கிப் போனுர்'' என்ருர் டாக்டர்.

இதற்குள் மணி எட்டடித்து விட்டது. வீட்டுக்குத் திரும்பிய ராமசாமியிடம் கறுப்பன் வாசலிலேயே சமாசாரத்தை அவிழ்த்து விட்டான். கைகால் நடுங்க, வாய் குழற, பதட்டத்தோடு மேலே ஓடி வந்தார்கள் இருவரும். தங்கத்தைக் கண்டதும் ஓவென்று அழ ஆரம்

பித்துவிட்டான் ஸ்ரீமதி ராமசாமி. "கொஞ்சம் தூங்கியிருக்கிறாள். அவ்வளவுதான்! ஒன்றும் பயப்படாதீர்கள்" என்று அடக்கினார் டாக்டர். திக்பிரமை பிடித்து நின்ற ராமசாமியை இன்பெக்டர் அழைத்து நடந்ததைச் சொல்லி, "குழந்தையைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். வீட்டில் ஏதேனும் காணாமல் போயிருக்கிறதா என்று மட்டும் கவனித்துச் சொன்னீர்களானால் என்னால் முடிந்ததைத் தாமதம் இல்லாமல் கவனிக்க முடியும்" என்றார் சாமர்த்தியம். ராமசாமி வீடு முழுவதும் சுற்றிப் பார்த்து விட்டு மாடி அறைக்கு வந்தார். மேஜை மேலிருந்த வளைப் பெட்டியைப் பார்த்ததுமே அவர் திடுக்கிட்டுப் போனார். பரபரப்புடன் அதன் அருகே சென்று அதை ஆராய ஆரம்பித்த அவர், "ஐயோ! இன்ஸ்பெக்டர் ஸார்! போச்சு! புத்தப் புது வளையல்கள் ஸார்! நாலாயிர ரூபாயைக் கொட்டி வாங்கி இன்னும் ஒரு வாரம்கூட ஆகவில்லையே. குழந்தைக்கு வேண்டும் என்று எவ்வளவோ ஆசையுடன் அந்த வைர வளை

யைப் பண்ணினேன், ஸார்! போய்விட்டதே!'' என்று அலறினார்.

''வேறு ஒன்றும் போகவில்லையே? அதைக் கவனியுங்கள்'' என்றார் சாமர்த்தியம்.

''இல்லை. வேறு ஒன்றும் போகவில்லை. 'ஸேப்' பூட்டியது பூட்டியபடியே இருக்கிறது. தங்கம் கல்யாணத்துக்கு வரவில்லை என்று சொல்லிவிட்டதால் வளைகளை வாங்கி 'ஸேப்பி'லே வைக்காமல் இந்த அலமாரியிலே வைத்துப் பூட்டிவிட்டுப் போனேன். நாலாயிரம் போச்சே, இன்ஸ்பெக்டர்!'' என்றார் ராமசாமி.

''நீங்கள் வளை வாங்கினது யார் யாருக்கெல்லாம் தெரியும்?''

''வளை வாங்கினது நான், என் மனைவி, தங்கம் மூன்று பேருக்கே தெரியும். ஒரு வேளை நாங்கள் வளையைப் பற்றிப் பேசிக்கொள்வதைச் சிவப்பன் கேட்டிருக்கலாம். ஏனென்றால் அவன் எப்போதும் இங்கேயேதான் இருக்கிறான். மேலும் அவன் புது ஆள். கறுப்பனைச் சந்தேகப்படவே முடியாது'' என்றார் ராமசாமி.

தங்கம் அப்போதுதான் மெல்லக் கண்ணைத் திறந்தாள். 'இம் இம்' என்று முனகினாள்.

''என் கண்ணே! என் வயத்தலே பாலை வார்த்தியே'' என்று சொல்லிக்கொண்டே ஸ்ரீமதி ராமசாமி தங்கத்தைக் கட்டிக்கொண்டாள். எல்லோரும் அவள் படுக்கையைச் சூழ்ந்து கொண்டனர்.

''அந்த ஆள் போயிட்டானா அப்பா? அவன் போயிட்டானா?'' என்று தங்கம் நடுங்கியபடியே நாலு புறமும் பார்த்துக்கொண்டே கேட்டாள். ''யாரம்மா வந்தது? என்ன நடந்தது? முழுதும் சொல்லும்மா. நான் அவனைக் கண்டுபிடிச்சு நன்றாக உதைக்கிறேன்'' என்றார் சாமர்த்தியம். அவர் முகத்திலே அப்போது சிறு புன்சிரிப்புத் தோன்றி மறைந்தது. ''சாயங்காலம் ஐந்து மணிக்குக் கறுப்பன் வீட்டிற்குப் போனதும் வாசலிலே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். ஐந்தரை மணிக்கு மருந்து சாப்பிடுவதற்காகச் சிவப்பன் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போனான். அந்தத் தண்ணீரைக் குடிக்கும்போதே என்னவோ மாதிரியிருந்தது. கொஞ்ச நாழிகைக்கெல்லாம் தலைசுற்றுகிற மாதிரி இருந்தது. அப்போ ஒரு ஆள்...''

தங்கம் இந்த இடத்தில் சற்று நிறுத்தினாள். அவள் உடல் வெடவெடவென்று உதறியது. முகத்தில் பயம் தாண்டவமாடிற்று.

''அந்த ஆள் எப்படி இருந்தான்? பயப்படாமல் சொல்லு'' என்று படபடத்தார் ராமசாமி. இன்ஸ்பெக்டர் வாயைத் திறக்காமல் அவளை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''தலையிலிருந்து கால் வரையில் ஒரே கறுப்புத் துணியால் மூடிக்கொண்டிருந்தான். கண்கள் இருக்குமிடத்திலே ஓட்டை. கையிலே கத்தி வைத்துக்கொண்டிருந்தான்.

அவன் சாவியால் அலமாரியைத் திறந்தான். நான் எழுந்திருந்து ஓட முடியாமல் தலையைச் சற்றியது. அப்படியே மேஜைமேல் விழுந்தேன். அந்த ஆள் பெட்டியைத் திறந்தான். அதற்குமேல் எனக்கு ஒன்றும் தெரியாது'' என்றாள் அவள்.

இன்ஸ்பெக்டர் அவள் சொன்னதையெல்லாம் கவனமாகக் கேட்டுக்கொண்டார். தங்கமோ ஓர் ஆள் வந்ததாகச் சொல்லுகிறாள். சிவப்பனோ ஒரு பையனுடைய கால்கள் தெரிந்ததாகச் சொல்லுகிறான். யார் சொல்லுவதை நம்புவது? நம்மிடம் வந்து சேதி சொன்னானே, அவன் யார்?

சட்டென்று இன்ஸ்பெக்டர் எழுந்தார். "மிஸ்டர் ராமசாமி! நீங்கள் தூக்க மருந்து வைத்திருக்கும் இடத்தைக் காட்ட முடியுமா?'' என்றார்.

"ஓ'' என்று சொல்லிவிட்டு அலமாரியின் மேல்தட்டில் வைக்கப்பட்டிருந்த அந்த மருந்துச் சீசாவைக் காட்டினார். இன்ஸ்பெக்டர் அந்த மருந்துச் சீசாவைக் கையிலெடுத்துத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். அதை மோந்து கூடப் பார்த்தார். அவர் மட மட வென்று திரும்பி முதலில் கண்ட அலமாரியின் கொத்துச் சாவியை எடுத்து அதையும் வாசனை பார்த்தார். அவர் முகத்தில் தெளிவு பிறந்தது.

"என்ன ஸார்! என்ன நினைக்கிறீர்கள்? போனது தானா இல்லை கிடைக்குமா?'' என்றார் ராமசாமி.

"பிறகு சொல்லி அனுப்புகிறேன்'' என்று சொல்லிவிட்டு வெளியே வந்தார் இன்ஸ்பெங்டர். கூடவே வெளியே வந்த டாக்டர், "கடவுள் சரியாகத்தான் யாருக்கும் அளந்து போடுகிறார். ரொம்பவும் மானஸ்தரான மண்டிக் கடை மன்னார்சாமியை ஒரு நாலாயிரரூபாயை இன்றைக்குள் கட்டாவிட்டால் மானத்தையெல்லாம் போக்கி விடுவதாகப் பயமுறுத்தி நோட்டீஸ் விட்டிருக்கிறார். இதோ ஒரே நிமிஷத்தில் நாலாயிர ரூபாய் போய்விட்டது'' என்றார். சட்டென்று இன்ஸ்பெக்டருக்கு அந்தக் கிழிந்த கவரின் ஞாபகம் வந்தது.

மறுநாள் மாலை இன்ஸ்பெக்டர் சாமர்த்தியம் சாய்வு நாற்காலியில் சாய்ந்து, யாரையோ எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். சற்று நேரத்துக்கெல்லாம தங்கம் உள்ளே நுழைந்தாள். "என்னைத் தனியாக வரச் சொன்னீர்களாமே!'' என்றாள்.

"ஆமாம்! உன்னிடம் சில சமாசாரங்களெல்லாம் உண்மைதானா என்று தெரிந்துகொள்ள வேண்டும். கேட்கட்டுமா?'' என்றார். "உம்'' என்று தங்கம் தலையை அசைத்தாள். இன்ஸ்பெக்டர் ஆரம்பித்தார்:—

ராமசாமி பெரிய பணக்காரரானாலும் பேராசை பிடித்தவர். மண்டிக் கடை மன்னார்சாமி சுய

மாகவே முன்னுக்கு வந்தவர். வியாபார நோட்டம் தெரிந்தவர். சமயங்களில் கடனோ உடனோ வாங்கி நிலைமையைச் சமாளித்து, நல்ல லாபம் தட்டுவார். அப்படித் தான் ஒரு சமயம் ராமசாமியிடம் கடன் வாங்கிவிட்டார். கடைசியில் பணத்திற்காக அவரை ராமசாமி மிகவும் நெருக்கினார். இரண்டு நாளில் பணம் தருகிறேன் என்று சொன்னவரை மறுநாள் இரவுக்குள் பணத்தை வைக்காவிட்டால் அவமானப்படுத்தி விடுவதாக மிரட்டினார். மன்னார்சாமி திணறினார்; திண்டாடினார். மன்னார்சாமியின் பிள்ளை நாராயணசாமி தங்கத்தின் வகுப்பில்தான் படித்து வந்தான். தங்கத்துக்கு வீட்டில் நல்ல செல்வாக்கு உண்டு என்று அவனுக்குத் தெரியும். அவள் சொன்னாலாவது அவளுடைய அப்பா இரண்டு நாள் பொறுக்க மாட்டாரா? இவ்வாறு யோசித்த நாராயணசாமி ஒரு கடிதம் எழுதி விட்டான் துணிந்து. தங்கம் கடிதத்தைப் படித்தாள். அப்பாவின் பிடிவாதம் அவளுக்குத் தெரியும். அவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கடைசியில் நாராயணசாமியுடன் டெலிபோனில் பேசினாள். திட்டப்படி கறுப்பனைச் சாயங்காலம் வீட்டிற்கு அனுப்பினாள். சாமி வந்தபோதுதான் சிவப்பன் கொல்லைப்புற விளையாட்டை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். வளையை எடுத்துக்கொண்டு போய் விற்றுப் பணத்தைக் கட்டும்படியும் அவர்களுக்குப் பணம் வந்ததும் திருப்பி வாங்கிக்கொடுத்து விடும்படியும் சொல்லி அவனை அனுப்பிவிட்டாள். அப்பாவுக்கு என்ன பதில் சொல்வது என்று பயம் பிடித்துக் கொண்டுவிட்டது தங்கத்துக்கு. அதே சமயம் பின்புற மைதானத்தில் விளையாடிய பந்து கண்ணாடி ஜன்னலை உடைத்துக்கொண்டு வந்து விழுந்ததைப் பார்த்ததும் ஓர் அற்புத யோசனை தோன்றியது. உடனே நாயை அவிழ்த்து விட்டாள். அதன் கழுத்துப் பட்டியைக் கீழே எறிந்தாள். அப்பாவின் தூக்க மருந்தை எடுத்துச் சாப்பிட்டுவிட்டு மேஜைமேல் படுத்துவிட்டாள். ஆனால் பந்தை எடுக்க வந்த பையன் தங்கம் மயங்கிக் கிடப்பதைக் கண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ச் சொல்லிவிட்டான். சரிதானா தங்கம்?''—இன்ஸ்பெக்டர் நிறுத்தினார். தங்கம் கண்களை அகல விரித்தாள். ''உங்களுக்கு இவ்வளவும் நேரில் கண்டதுபோல எப்படித் தெரிந்தது?'' என்றாள்.

''நீ எவ்வளவோ சாமர்த்தியமாகத்தான் வேலை செய்தாய். ஆனால் சின்னவள்தானே! சாந்து இட்டுக்கொண்டு அந்தக் கையைத் துடைக்காமலேயே தூக்கமருந்தையும் அலமாரியையும் சாவியையும் தொடலாமா? அதன் வாசனையே நீதான் என்று எனக்குக் காட்டிக் கொடுத்துவிட்டது. இருந்தாலும் நீ எதற்கும் கவலைப்படவேண்டாம். மன்னார்சாமி நாளையே பணம் கிடைத்தவுடன் வளையலை என்னிடம் கொடுத்துவிடுவார். நானும் ஒன்றும் தெரியாத மாதிரி, 'பண்டம் கிடைத்துவிட்டது. குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியவில்லை' என்று உன் அப்பாவிடம் சொல்லிவிடுவேன்'' என்றார். தங்கத்தின் கண்களில் நன்றிக் கண்ணீர் நிரம்பியது.

ஓய்ந்த வேளையில் . . .

டி. வி. ரங்கசாமி



மேலேயுள்ள படத்தில் இடம் வலமாக முதல் வரிசையைக் கவனியுங்கள். முதல் படத்திலுள்ள முதல் எழுத்து, இரண்டாவது படத்தின் இரண்டாவது எழுத்து, மூன்ருவது படத்தின் மூன்ருவது எழுத்து, நான்காம் படத்தின் நான்காம் எழுத்து ஆகியவற்றைச் சேர்த்துப் பார்த்தால் விடை வரும்.

(விடை 12-ஆம் பக்கம் பார்க்க.)

வியாழன்

பெ. நா. அப்புஸ்வாமி, ஜே. பி. மாணிக்கம்

2

‘இங்கே மூச்சுத் திணறுகிறது. ஆனால், இதில் ஜலதோஷமே பிடிக்காது என்று சொல்லலாம். ஏனென்றால், இங்குள்ள வாயுமண்டலத்திலே அம்மோனியா ஆவி நிறைய இருக்கிறது. இதில் பிராணவாயு (ஆக்ஸிஜன்) இல்லை. ஹைட்ரோஜன், ஹீலியம், மெதேன் என்னும் வாயுக்களே இருக்கின்றன. மெதேன் என்பது ஒருவகை விஷவாயு. அதைக் கொள்ளி வாயு என்று சிலர் சொல்லுகிறார்கள். இது பனிக்கட்டி இல்லை. உறைந்த கடல். இந்தக் கடல் நீர் காரத் தன்மை உள்ளது. இவற்றின் நீரிலே அம்மோனியா கரைந்திருக்கிறது.’’

‘‘நமது கடலில் உப்புக் கரைந்திருப்பது போலவா?’’

‘‘ஆமாம். இதோ வானத்தில் பாருங்கள்! ஒரே சமயத்தில் எத்தனை சந்திரன்கள் தெரிகின்றன. இப்பொழுது நாலு தெரிகின்றன, பாருங்கள்.’’

‘‘மொத்தம் பதினொரு சந்திரன்கள் என்றீர்களே? அவைகளை யார் கண்டுபிடித்தார்கள்?’’ என்றான் கண்ணன்.

‘‘வியாழனின் சந்திரன்களை முதன் முதலாகக் கண்டவர் கலிலியோ. சுமார் முந்நூறு வருஷங்களுக்குமுன் அவர் அவைகளைத் தாம் செய்த தூரதிருஷ்டிக் கண்ணாடியால் கண்டுபிடித்தார். அவைகள் சிறியவைகளாயும் வெகு தூரத்துக்கு அப்பாலும் இருப்பதால், அவைகளைச் சாதாரணக் கண்களால் பார்க்க முடியாது. ஆகையால், கலிலியோ பார்ப்பதற்குமுன் அவைகளை ஒருவரும் பார்த்ததில்லை.’’

‘‘அவைகள் அவ்வளவு சிறியவைகளா?’’ என்றாள் ராதா.

‘‘அப்படிச் சின்னவைகள் இல்லை. தூரத்தை எண்ணித்தான் சிறியவைகள் என்றேன். அவற்றுள் ஐந்து சந்திரன்கள் நமது சந்திரனைவிடப் பெரியவை. இரண்டு கிட்டத்தட்டச் செவ்வாயின் அளவாக இருக்கின்றன. மற்றவை எல்லாம் நமது சந்திரனைவிடச் சிறியவை. அவைகளில் இரண்டு சந்திரன்கள் மிகவும் சிறியவை. அவைகளின் குறுக்களவு சுமார் இருபது மைல்களுக்கு மேல் இல்லை.’’

‘‘செவ்வாயின் சந்திரன்களுக்குப் பெயர் வைத்திருப்பதைப்போல் இவைகளுக்கும் பெயர் வைத்திருக்கிறார்களா?’’ என்றாள் ராதா.



வாயு மண்டலம்



வியாழனுடைய சந்திரன்கள்

"அது ஒரு வேடிக்கை. முதலில் கண்டுபிடித்த நாலு சந்திரன்களுக்கும் கிரேக்கப் புராணங்களிலிருந்து அழகான பெண்களின் பெயர்களையும், ஓர் இளைஞனின் பெயரையும் வைத்தார்கள். பிறகு, ஒவ்வொன்றாக மேன்மேலும் சந்திரன்களைக் கண்டுபிடித்ததும் அலுத்துப் போய்விட்டது. நாலுக்குப் பிறகு, ஐந்து, ஆறு, ஏழு என்று இப்போது பதினொன்று என்னும் பெயர்வரை வந்திருக்கிறார்கள்.

"ஆமாம். இங்கே வியாழனில் ஒன்று கவனித்தீர்களா? நமக்கு இங்கே நடப்பது எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது!"

"என் குளிரினாலா?"

"இல்லை. இதற்குக் காரணம் வேறு. இதோ இந்த நிறுக்கும் யந்திரத்தில் நமது எடை கிட்டத்தட்ட இரண்டரை மடங்கு அதிகமாகிவிட்டது, தெரிகிறதா? நமக்கு நடப்பது கஷ்டமாயிருப்பதற்குக் காரணம் இங்குள்ள ஆகர்ஷண சக்திதான்."

"ஆனால், எடைக்குத் தகுந்தபடி பலமும் இருக்காதா?" என்றாள் ராதா.

"நல்ல கேள்வி. ஆனால் உயரத்துக்கும் எடைக்கும் ஒரு விகிதமும் உயரத்துக்கும் பலத்துக்கும் மற்றொரு விகிதமும் இருக்கின்றன."

"விளங்கவில்லையே" என்றான் கண்ணன்.

"சொல்லுகிறேன். ஒன்று போல அமைந்த இரண்டு பிராணிகளை எடுத்துக் கொள்ளுவோம். ஆனால் முதலாவதைவிட இரண்டாவது இருமடங்கு உயரம் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது முதலாவதைவிட இரண்டாவது பிராணி நாலு மடங்கு பலம் உள்ளதாய் இருக்கும். ஆனால், எட்டு மடங்கு கனம் உள்ளதாய் இருக்கும். ஆகையால், முதலாவதைவிட இரண்டாவது பிராணிக்குப் பாதிச் சுறுசுறுப்பே இருக்கும். இனி, திரும்பிப் போகலாமா?" என்றார் விஞ்ஞானம்.

"போகலாம். இதோ பூமிக்கு வந்துவிட்டோம். ஆனால், நிஜமாகவே வியாழனில் உயிர் இருக்கிறதா?" என்றான் கண்ணன்.

"அதைப்பற்றி முடிவாக ஒன்றும் சொல்லமுடியாது. பல விஞ்ஞானிகள் இதைப் பற்றி ஊகங்கள் கொண்டிருக்கிறார்கள். சில வேடிக்கையாக இருக்கின்றன."

"என்ன, என்ன சொல்லுங்கள்!"

"அங்கே உள்ள மனிதர்களுக்கு வௌவால்களைப் போல் சிறகுகள்



பூமியும் வியாழனும்

உண்டு. அதிலே உள்ளவர்கள் கூழ்போன்ற உடலை உடையவர்கள். அங்குள்ளவர்கள் சிறந்த அறிவாளிகள். அங்குள்ள குளிரால் ஏற்படும் கஷ்டத்தைச் சமாளிக்கப் பூமியைக் குடைந்து, நகரங்களைத் தரை மட்டத்துக் கீழே கட்டிக்கொண்டு, நெருப்பின் வெப்பத்தால் கதகதவென்று மாளிகைகளில் வாழ்கிறார்கள். இல்லை, அங்கே வெப்பம் அதிகம். ஆகையால், அங்குள்ளவர்கள் கடலின் நீரால் குளிர்ச்சி பெற்ற டளிங்கு மண்டபங்களில் வாழ்கிறார்கள். அவர்கள் அறிவில் சிறந்தவர்கள். ஆகர்ஷண சக்தியின் பாரத்தை நீக்க அவர்கள் வழி கண்டுபிடித்து, எளிதாக உலாவி வருகிறார்கள். இதெல்லாம் தப்பு. அங்குள்ளவர்கள் பாதி தாவர வகையையும் பாதி பிராணி வகையையும் சேர்ந்த அற்புதச் சிருஷ்டிகள். அவர்கள் சிரஞ்சீவிகளாய் வாழ்கிறார்கள். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்கிறார்கள்.

"வியாழனைப் பற்றி மற்றொரு கற்பனையும் இருக்கிறது. 'வியாழன் என்பது ஒரு வெளி உலகமும், அதற்கு முப்பது, நாற்பது ஆயிரம் மைல்களுக்கு உட்புறத்திலே கைதியாகக் கிடக்கும் மற்றோர் உலகமும் சேர்ந்த இரட்டை உலகம். நாம் காண்பது வெளிக்கூடு. உள்ளே இருக்கும் உலகத்தைப் பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது' என்கிறார்கள் வேறு சிலர்.

"இப்பொழுது தெரிந்தவைகளைக் கொண்டு பார்த்தால், அங்கே உயிர் வாழ முடியாது என்றுதான் நான் நினைக்கிறேன்.

"வியாழனை நம்முடைய நாட்டில் குரு என்று சொல்லுகிறார்கள். கிரேக்க நாட்டில் ஜூபிட்டர் என்பவர் தேவதேவன். அப் பெயரையே இந்தக் கிரகத்துக்கு இட்டிருக்கிறார்கள். மிகவும் பெரிய கிரகத்துக்குத் தேவதேவனின் பெயர் வைத்ததும் பொருத்தம் தானே?" என்று முடித்தார் விஞ்ஞானம்.

ஓய்ந்த வேளையில் - விடைகள்:

1. கம்பன். 2. காளிதாஸ். 3. கபிலர்.

4. துகாராம். 5. ராமதாஸ்.

விசித்திர வியாபாரம்

ராஜன்

1

சோபாவில் சாய்ந்து உட்கார்ந்தபடி துப்பறியும் நாவல் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தான் சாமுவேல். சோபாவுக்கு எதிரே போடப்பட்டிருந்த வட்ட மேஜையைத் துடைத்துக் கொண்டிருந்த வேலைக்காரப் பெண் பத்மா, "அம்மா கூப்பிடறாங்க!" என்றாள்.

சாமுவேல் சட்டென்று தலையை நிமிர்த்தி, "யாரைக் கூப்பிடறாங்க?" என்றான்.

"உங்களைத்தான்! மணி ஒன்பது ஆகிறது. இன்னும் டிபன் சாப்பிடவில்லையாமே!" என்றாள். அவள் கவுனில் குத்திக்கொண்டிருந்த பட்டாம் பூச்சி போன்ற கல் பதித்த புரூச்சின் மீது அவன் பார்வை பதிந்தது! அந்தப் புரூச் அசல் வைரத்தைப் போல் கண்ணைப் பறித்தது!

"புரூச் ஏது? அசல் வைரமா?" என்றான் சாமுவேல்.

"அசல் வைரத்துக்கு நான் எங்கே போவது? இது இமிடேஷன் வைரம்! ஐந்து ரூபாய் கொடுத்து நேற்றுத்தான் வாங்கினேன்!" என்றாள் அவள்.

"இமிடேஷன் வைரமா? எதோ காட்டு, பார்க்கலாம்!"

அவள் அந்தப் புரூச்சைக் கழற்றிக் கொடுத்தாள். அவன் அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு, "எந்தக் கடையில் வாங்கினாய்?" என்றான்.

"விஜயா ஸ்டோரிலேதான்! ஐந்து ரூபாய் தாளுமா?" என்று கேட்டுவிட்டு அவனையே பார்த்தாள் பத்மா. அவனுக்கு இந்தக்

கல் பரீட்சை எல்லாம் தெரியும்.

“ஐந்து ரூபாய்க்குக் கண்ணை மூடிக்கொண்டு வாங்கலாம்! இந்தா, பத்திரமா வச்சுக்கோ!” என்று சொல்லிப் புரூச்சை அவளிடம் கொடுத்தான். துப்பறியும் நாவலை மேஜைமீது போட்டுவிட்டு, நேராக அம்மாவின் அறைக்குள் நுழைந்தான்.

“உன்னுடைய புரூச்சைக் கொடும்மா! பார்த்துவிட்டுத் தருகிறேன்!” என்றான் சாமுவேல்.

“எதுக்குடா?”

“கொடேன், பார்க்கலாம்!”

அம்மா பீரோவிலிருந்த ஓர் அறையைத் திறந்து பட்டாம்பூச்சி போன்ற வைர புரூச்சை எடுத்து அவனிடம் கொடுத்தாள். அவன் அதைப் பார்த்தான். பிறகு, “பத்மா வாங்கியிருக்கும் புரூச்சைப் பார்த்தாயா? அது ஐந்து ரூபாய்! இது ஆயிரம் ரூபாய்! ஆனால் இரண்டுக்கும் ஒன்றுமே வித்தியாசமில்லை!” என்று சொல்லிவிட்டுப் புரூச்சைத் திருப்பிக் கொடுத்தான்.

“போடா மண்டு! அது இமிடேஷன் வைரம்! இது அசல் வைரம்!”

அவன் கீழே ஓடிப்போய் டிபன் சாப்பிட்டுவிட்டு, தன் அறைக்கு ஓடி வந்தான். பத்து மணிக்குமேல் பாங்கியில் கட்டுவதற்காக அவன் அப்பா கொடுத்துவிட்டுப் போயிருந்த ஆபீஸ் பணத்தை எடுத்துப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

அவனுடைய அழகிய ‘மாரிஸ் மைனர்’ பங்களாவைக் கடந்து காற்றாய்ப் பறந்தது!



2

விஜயா ஸ்டோருக்கு எதிரே காரை நிறுத்தினான் சாமுவேல். காரில் உட்கார்ந்தபடியே அந்தக் கடையை ஒரு நிமிஷம் பார்த்தான். வெளியே கண்ணாடி பீரோக்களில் இமிடேஷன் வைர நகைகளும், விளையாட்டுச் சாமான்களும் மனத்தைக் கவர்ந்தன.

சாமுவேல் அந்தக் கடையில் நுழைந்து, இமிடேஷன் நகைகள் விற்கும் குமாஸ்தாவிடம் சென்றான். “புரூச் வேண்டும்!” என்றான்.

அந்தக் குமாஸ்தா ஓர் அட்டைப் பெட்டியை எடுத்து மேலே வைத்தான். அது நிறையப் புரூச்சுகள் இருந்தன! அவன் ஒரு புரூச்சை எடுத்துப் பார்த்தான். பத்மா வாங்கிய புரூச்சு மாதிரியே இருந்தது! எல்லாம் ஒரே மாதிரிதான்!

“இது என்ன விலை?”

“ஐந்து ரூபாய்!”

“மொத்தம் எத்தனை இருக்கின்றன?”

“ஐம்பது இருக்கிறது... இல்லை. இல்லை! இதில் நேற்று ஒன்று விற்றுவிட்டது! மீதி நாற்பத்தொன்பது.”

“சரி! அந்தப் பெட்டியை அப்படியே மூடி நன்றாகக் கட்டிக் கொடு! பில் போடு!”

புதிய நோட்டுக்களை எண்ணி மேஜைமீது வைத்தான். பில்லை வாங்கிக்கொண்டு அந்தப் பெட்.

டியை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். சட்டென்று ஏதோ நினைத்துக்கொண்டு, "இந்தப் புரூச்சுகள் உங்களுக்கு எங்கே இருந்து வருகின்றன?" என்று அந்தக் குமாஸ்தாவிடம் கேட்டான்.

அந்தக் குமாஸ்தா தயங்கினான்.

"சும்மா சொல்லு, நான் யாரிடமும் சொல்லவில்லை!" என்றான் சாமுவேல்.

"அதனால் எங்கள் வியாபாரம் கெட்டுப் போகும்!" என்றான் அந்தக் குமாஸ்தா.

சாமுவேல் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அவன் கையில் திணித்தான். "சும்மா பாக்கெட்டில் போடு" என்றான்.

குமாஸ்தா பத்து ரூபாயைப்பாக்கெட்டில் போட்டுக்கொண்டே, "யாரிடமும் சொல்லாதீர்கள். பக்கத்து டவுனில் மோகன்ராம் அண்டு கம்பெனி என்று ஒரு பெரிய கம்பெனி இருக்கிறது. அவர்களிடமிருந்துதான் நாங்கள் வாங்குகிறோம்!" என்றான்.

சாமுவேல் அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. பக்கத்து டவுனில் மோகன்ராம் அண்டு கம்பெனியைத்தேட அவனுக்கு வெகு நேரமாகவில்லை.

ஐந்து அடுக்குகள் கொண்டது அந்தப் பெரிய கட்டிடம். அசல் வைர நகைகளும் இமிடேஷன் வைர நகைகளும் வியாபாரம் செய்துவந்த அந்தப் பெரிய கம்பெனியின் ஓர் ஓரமாகக் காரை நிறுத்திவிட்டு, கீழே இறங்கினான். காம்பவுண்டு கேட்டைக் கடந்து சென்றதும், கட்டிடத்தின் ஓர் ஓரத்தில் குவியல் குவியலாகக் காலி தகர டப்பாக்கள் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தான். அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பால் டப்பாக்கள் அவை! காலி பால் டப்பாக்களைப் பார்த்ததும் அவனுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஆனால் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் மூன்றாவது மாடியிலிருந்த ஆபீஸை நோக்கிச் சென்றான்.

அப்போது சரியாகப் பகல் மணி ஒன்று. ஆபீஸிலிருந்து ஒவ்வொருவராக வெளியேறிக்கொண்டிருந்தார்கள். முதலிலேயே மேஜை போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த கண்ணாடி போட்ட ஆசாமி சாமுவேலை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "என்ன வேணும்?" என்றார்.

"உங்கள் முதலாளியைப் பார்க்கவேண்டும்!" என்றான் சாமுவேல்.

"பக்கத்தில் பால் பண்ணை ஒன்று இருக்கிறது. அங்கே போயிருக்கிறார். இன்று சனிக்கிழமை அல்லவா? இன்று அரை நாள் லீவு. அப்படியே பங்களாவுக்குப் போய் விடுவார்! உங்களுக்கு என்ன வேண்டும் சொல்லுங்கள்!" என்றார் அந்த ஆசாமி.

“உங்கள் முதலாளி பால் பண்ணை வேறு நடத்துகிறாரா? அதுதான் வெளியே காலி டப்பாக்கள் குவிந்து கிடக்கின்றன” என்றான் சாமுவேல்.

“ஆமாம்! பால் பண்ணை பக்கத்திலேயே இருக்கிறது! அங்கே இடமில்லாததால் காலி டப்பாக்களை இங்கே போட்டு விடுகிறார்கள்!”

“உங்கள் கம்பெனியில் இமிடேஷன் வைர நகைகள் விற்பதோடு, அசல் வைர நகைகளும் விற்கிறீர்கள், இல்லையா?”

“ஆமாம்! உங்களுக்கு என்ன வேண்டும்?”

“இமிடேஷன் வைர நகைகள் கொஞ்சம் வேண்டும்! இந்தக் காலத்தில்தான் உத்தியோகம் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறதே! வியாபாரம் செய்யலாம் என்று யோசனை!”

அதே சமயத்தில் ஓர் ஆசாமி பால் டப்பாக்கள் அடங்கிய அட்டைப் பெட்டி ஒன்றைப் பக்கத்து அறைக்குள் எடுத்துப் போவதைப் பார்த்தான். அதுதான் முதலாளியின் அறை! சாமுவேல் உடனே, “நான் திங்கட்கிழமை வருகிறேன்!” என்று சொல்லி விட்டுக் கீழே இறங்கிப் போய் விட்டான். ஆனால் வெளியே போகவில்லை. அந்தக் கட்டிடத்தின் பின்னால் காலி டப்பாக்கள் அடுக்கி வைத்திருந்த இடத்தில் ஒளிந்து கொண்டான்!

3

சரியாக மணி மூன்று. வெளி கேட்டுக்கு அருகில் நின்றிருந்த தார்வானைத் தவிர அங்கே ஒருவருமே இல்லை. ஆபீஸிலிருந்து எல்லோரும் போய்விட்டார்கள்.

சாமுவேல் மெல்ல எழுந்து, ஆபீஸை நோக்கி நடந்தான். மூன்றாவது மாடியை அடைந்தான். வெளியே மூடியிருந்த கதவைத் தள்ளிப் பார்த்தான். திறக்கவில்லை. கைப்பிடியைத் திருகினான். கடக்கென்று வில் பூட்டு திறந்துகொண்டது. முதலாளியின் அறையில் சென்று மறுபடியும் கதவைச் சாத்தினான். பூட்டு மறுபடியும் மூடிக்கொண்டது. முதலாளியின் அறைக் கதவு சும்மா சாத்தியிருந்தது. அதைத் திறந்துகொண்டு உள்ளே சென்றான். பின்னால் கதவைச் சாத்தி விட்டுப் பார்த்தான்.

புத்தம் புதிய பால் டின் ஒன்று மேஜைமீது இருந்தது! மேஜைக்குப் பக்கத்தில் கீழே அட்டைப் பெட்டி நிறையப் பால் டின்கள் தான்! அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை!

‘இது என்ன, விசித்திர வியாபாரமாக இருக்கிறது! நகைகள் வியாபாரம் செய்யும் ஒருவர் பால் பண்ணை நடத்துவது ஆச்சரியமாக இருக்கிறது! இரண்டாவதாக பால் டப்பாக்கள் இங்கே என் வரவேண்டும்?’ என்று எண்ணினான் சாமுவேல். பிறகு ஏதோ ஒரு

முடிவுக்கு வந்தவனைப்போல், பாக்கெட்டிலிருந்த பேனுக்கத்தியை எடுத்தான். கத்தியைப் பிரித்து, பால் டப்பாவினமேல் மூடியை வெட்டி எடுததான். சத்தமில்லாமல் ஒரு நிமிஷத்தில் மூடியை அகற்றினன். உள்ளே பதம் செய்யப்பட்ட பால் நிறைந்திருந்தது. அவன் சட்டென்று அந்த டப்பாவில் கையை விட்டுத் துழாவினன். அடியில் ஏதோ தட்டுப் பட்டது. உடனே அவன் முகம் மலர்ந்தது! வைர புருச்சுகள்! கைக்குட்டையை எடுத்து அவைகளைத் துடைத்தான்! ஆஹா! அசல் வைரங்கள் கண்ணைப் பறித்தன.

வெளியே கதவு திறக்கும் சப்தம் கேட்டது. சாமுவேல் சட்டென்று அந்தப் பால் டப்பாவைக் கதவுக்குப் பக்கத்தில் வைத்து விட்டு, வேறு ஒரு டப்பாவை மேஜைமீது வைத்தான். கதவுக்குப் பின்னல் ஓடிப் போய் நின்றுகொண்டான்.

இரண்டு பேர் பேசிக்கொண்டு உள்ளே வரும் சப்தம் கேட்டது. ஆனல் அவர்கள் அந்த அறைக்குள் வரவில்லை! அவர்கள் பேசியது மட்டும் நன்ருகக் கேட்டது.

“ஹெட்கிளார்க்கை இருக்கச் சொன்னேன். எங்கேயோ காணுமே?” என்றது குரல்.

“காபி சாப்பிடப் போயிருப்பார்! அந்த ஐம்பது வைர புருச்சுகளை யாருக்கு அனுப்பினேம் என்று கண்டு பிடிக்க முடியவில்லை. தவறுதலாக இமிடேஷன் வைரத்துக்குப் பதில் அசல் வைர புருச்சுகள் போய்விட்டன! ஆயிரம் ரூபாய் வீதம் விரயனை ஆகியிருக்கும்!

“இனிமேலாவது ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்! நாளைக்கு ‘ஜலவீரன்’ கப்பல் வருகிறது. அதில் ஐயாயிரம் பால் டப்பாக்கள் வரும்! ஒவ்வொரு டப்பாவிலும் இருக்கும் வைரத்தை நாளைக்கே எடுத்து விட வேண்டும்!”

அவர்கள் பேசிக்கொண்டே வெளியே போனர்கள்.

சாமுவேலுவுக்குப் புரிந்துவிட்டது! வரி சட்டாமல் வைரங்களை இறக்குமதி செய்ய அவர்கள் செய்யும் சூழ்ச்சியை அரசாங்கத்துக்குத் தெரிவிக்க வேண்டும்! மெல்ல வெளியே வந்து, தார்வானுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டுப் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் சென்ருன்.

4

மறுநாள் ‘ஜலவீரன்’ கப்பல் கரையை அடைந்ததும் சுங்க அதிகாரிகள் அந்த ஐயாயிரம் பால் டப்பாக்களையும் உடைத்து, அவைகளிலிருந்த வைர நகைகளைக் கைப்பற்றினர்கள்! மோகன்ராம் அண்டு கம்பெனியின் பெயரும், சாமுவேலுவின் வீரப் பிரதாபங்களும் பத்திரிகைகளில் அடிபட்டன.

சாமுவேல் வேலைக்காரப் பெண் பத்மாவின் முதுகைத் தட்டி, “நீ வாங்கிய புருச்சு உண்மை வைரம் என்பதை நேற்றே கண்டுபிடித்து விட்டேன்! அதன் விலை ஆயிரம் ரூபாய் ஆகிறது! பத்திரமாக வைத்துக்கொள்!” என்ருன்.

“நீங்கள் வாங்கிய புருச்சுகள்” என்ருள் பத்மா ஆவலுடன்.

“அவைகளும் அசல் வைரங்கள்தான்! அவைகளை நான் வாங்கிய விலைக்கே எடுத்துக்கொள்ள அநுமதி கொடுத்து விட்டார்கள்” என்ருன்.

பாட்டு எப்படி?

வீயெஸ்

அன்று சந்திரன் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு பாரதி பாடல்களைப் படித்துக்கொண்டிருந்தான்.

அப்பொழுது அவன் அம்மா அவனைக் கூப்பிட்டு, "டேய் சந்திரா! இன்று வெள்ளிக்கிழமை. படத்துக்குப் போடப் புஷ்பம் வாங்கிக்கொண்டு வா" என்று கூறினாள். அவன் உடனே அம்மாவைப் பார்த்து, "பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம்!" என்று பாடினான்.

அவன் அம்மா மறுபடியும், "டேய்! போய்விட்டு வந்தாயானால் உனக்குக் கொழுக்கட்டை தருவேன்" என்றாள். உடனே சந்திரன், "நம்மை ஏய்ப்போருக்கு ஏவல் செய்யும் காலமும் போச்சே" என்றான்.

அவன் அம்மா சிறிது கோபம் கொண்டவளாய், "டேய்! நீ நல்ல பிள்ளை அல்லவா? அம்மா சொல்வதைக் கேட்க வேண்டாமோ?" என்றாள். அதற்குச் சந்திரன், "எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு" என்றான்.

"சீ! கழுதை! எதைச் சொன்னாலும் பெரிய கவிபோலப் பாடுகிறாயே?" என்று அம்மா தலையில் குட்டுவதற்கு வந்தாள்.

அப்போது அவன், "பிறர்க்கடிமை செய்தே, துஞ்சிடோம்;
இனி அஞ்சிடோம்....
இந்த அநீதிகள் ஏற்குமோ;
தெய்வம் பார்க்குமோ?"

என்றான். அவ்வளவுதான்! அவன் தலையில் நறுக் நறுக்கென்று இரண்டு குட்டுகள் விழுந்தன.

சந்திரன் அழுதுகொண்டே தோட்டத்திற்குச் சென்று ஒரு மரத்தினடியில் உட்கார்ந்தான். பசியோ வயிற்றைக் கிண்டியது. உடனே நைஸாக வீட்டினுள் நுழைந்தான். சுவாமி படத்துக்கு முன்னால் போய் நின்றான்.

"பஞ்சமும் நோயும் நின் மெய்யடியார்க்கோ? பாரினில்மேன்மைகள் வேறினி யார்க்கோ?" என்று பக்தனைப் போல் பாடலானான்.

அங்கே வந்த அவன் அம்மா, "சோறு கிடையாது போடா!" என்றாள்.

"தஞ்சமடைந்த பின் கைவிடுவாயோ? தாயும் தன் குழந்தையைத் தள்ளிடப்போமோ?"

அப்போதுதான் அவன் தந்தை உள்ளே நுழைந்தார்.

"நல்ல பாரதிப் பாட்டு! பாட்டைப் படித்தால் இப்படித்தான் நடக்கவேண்டுமாக்கும்" என்றாள் அம்மா அவரிடம்.

"போடா! போய் கைகால் கழுவிக்கொண்டு வந்து தொலை!" என்றார் அப்பா.

"தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" என்று பாடிக்கொண்டே சென்றான்.

இதைக் கேட்ட அவன் தந்தையும் தாயும் தம்மை அறியாமல் சிரித்தனர்.

கை அலம்பிவிட்டு வரும்பொழுது அவன் அண்ணன் நன்றாகச் சாப்பிட்டுவிட்டுச் சோபாவில் உட்கார்ந்துகொண்டிருப்பதைப் பார்த்து, "வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்றான்.

அவன் அண்ணன் அடிப்பதற்காகப் பாய்ந்து எழுந்தான். சந்திரன் சிட்டாய்ப் பறந்துவிட்டான். "டேய், போனால் போகிறதுடா! இந்த வழியாகவாவது அவன் பாரதிப் பாட்டைப் பாடிக் கற்றுக் கொள்கிறானே! நீ அதுவும் இல்லாமல் இருக்கிறாயே, சோம்பேறி!" என்றார்.

எட்டு எட்டு ஆயிரம்

'முத்தண்ணா'

'எட்டே எட்டு எட்டுக்களை வைத்துக்கொண்டு ஆயிரம் ஆக்கவேண்டும். உன்னால் முடியுமா, பார்! விடை கடைசிப் பக்கத்தில் கொடுத்திருக்கிறது' என்று அன்று ஒரு பத்திரிகையில் படித்தேன். 'இதை எப்படிக் கண்டு பிடிக்கிறது?' என்பது முதல் யோசனை. 'மூளையைப் போட்டுக் குழப்புவானேன்? கடைசிப் பக்கத்தைப் பார்த்தால் தெரிகிறது' என்பது இரண்டாவது யோசனை.

வெறும் பொழுது போக்குக்காக மட்டும் இம்மாதிரியான கேள்விகளை நாம் பயன்படுத்தினால் நமது மூளை வளராது. இந்தக் கேள்விக்குச் சீரான முறையில் விடையைக் கண்டு பிடிப்பதுதான் சரி என்று முடிவு செய்தேன். நீங்களும் அப்படித்தான் செய்ய வேண்டும். எங்கே, உங்களால் இந்தக் கேள்விக்கு முறையாக—கண்மூடித்தனமாக, குருட்டுப் போக்காக அல்ல—விடை கண்டு பிடிக்க முயலுங்கள். வெற்றி பெற்றால் நீங்கள் பின்பற்றிய முறையும் இதில் கொடுக்கப்பட்ட முறையும் ஒன்றுதானா என்று பாருங்கள். வெற்றி பெற முடியவில்லையானால், இதைக் கவனமாகப் படியுங்கள். எப்படிப் படிப்படியாகக் கேள்விக்கு விடை காணப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

8, 8, 8, 8, 8, 8, 8, 8.

இந்த எட்டு எட்டுக்களையும் கூட்ட வேண்டுமா? பெருக்க வேண்டுமா? அல்லது வேறு என்ன செய்ய வேண்டும்? இது ஒன்றும் கேள்வியில் சொல்லப்படவில்லை. ஆகையால், கூட்ட வேண்டும் என்று வைத்துக்கொண்டு

உபாத்: டேய் நரசிம்மா, இன்டர்வெல்லின் போது பெஞ்சிக்குப் பெஞ்சித் தாவித் தாவி விளையாடினாயாமே? எந்த ஊருடா உனக்கு?

நரசிம்மன்: குரங்குப்பாளையம், ஸார்.

— வீரபத்திரன், மயிலாப்பூர்.

தொடங்குவோம். அப்படியானால், எட்டின் மொத்தப், அதாவது கூட்டுப் பலன் ஆயிரமாக இருக்க வேண்டும், அல்லவா?

முதலாவது, ஒன்று ஸ்தானத்தைக் கவனிப்போம். ஒன்று ஸ்தானத்தில் 1000 உள்ள இலக்கம் பூச்சியம். அதில் எட்டைத் தவிர வேறு எந்த இலக்கமும் இருக்க முடியாது. அதில் உள்ள எட்டுக்களைக் கூட்டினால் கூட்டுப் பலனில் ஒன்று ஸ்தானத்தில் பூச்சியம் வரவேண்டும். உங்களுக்கு எட்டாம் வாய்ப்பாடு தெரியுமே. எத்தனை எட்டு இருந்தால் ஒன்று ஸ்தானத்தில் பூச்சியம் வரும்? வாய்ப்பாட்டைச் சொல்லிப் பாருங்கள். அதன்படி ஐந்து எட்டு நாற்பது (5×8=40) என்பதில் மட்டுமே பூச்சியம் கிடைக்கிறது. ஆகையால், ஒன்று ஸ்தானத்தில் ஐந்து எட்டுக்களை எழுதிக்கொள்ளுங்கள்.

8
8
8
8
8 சரிதானா?

மொத்தம் உள்ள எட்டுக்களில் மீதம் உள்ளவை மூன்று.

இரண்டாவதாக, பத்து-ஸ்தானத்தைக் கவனிக்க வேண்டும். ஒன்று ஸ்தானத்திலுள்ள எட்டுக்களின் கூட்டுப் பலன் 40. ஆகையால் 'காரி' 4. இதைப் பத்து ஸ்தானத்தோடு சேர்த்துக்கொள்ள வேண்டும். ஆயிரத்தில் பத்து ஸ்தானத்து இலக்கமும் பூச்சியம். ஆகவே பத்து ஸ்தானத்தின் கூட்டுப் பலன் பூச்சியத்தில் முடிய வேண்டும். ஏற்கனவே காரி 4 இருப்பதால், பத்து ஸ்தானத்தில் உள்ள எட்டுக்களின் கூட்டுப் பலன் 6 ஆக இருக்கவேண்டும்.

மறுபடியும் எட்டாம் வாய்பாட்டைச் சொல்லிப் பாருங்கள். அதன்படி ஈரெட்டு பதினாறு (2×8=16) என்பது ஒரு விடை; ஏழெட்டு ஐம்பத்தாறு என்பது மற்றொரு விடை. ஆனால் நமக்கு மீதம் உள்ள எட்டுக்கள் மூன்றுதான் அல்லவா? ஆகையால் இரண்டு எட்டுக்களைப் பத்து ஸதானத்தில் எழுதுவோம். முன்னால் எழுதியதையும் சேர்த்தால், அது, இப்படித் தோன்றும்.

88
88 இப்பொழுது நம்முடைய
8 எட்டுக்களில் ஏழு எட்டுக்
8 களை உபயோகப் படுத்தி
8 விட்டோம்.

இனி மீதம் உள்ளது ஒரே எட்டுத்தான்.

மூன்றாவதாக, அந்த மீதமுள்ள எட்டை நூறு ஸ்தானத்தில் எழுதுவோம். முன்னால் எழுதியதோடு இதையும் சேர்த்துக் கொண்டால், நாம் எழுதி முடித்தது பக்கத்தில் காட்டியபடி இருக்கும்.

888
88
8
8
8

கடைசியாக, நாம் எழுதிய எட்டு எட்டுக்களையும் கூட்டிப் பார்ப்போம்.

ஆகா! மொத்தம்—அதாவது கூட்டுப் பலன் 1000 ஆக இருக்கிறதே! ஆதலால், நாம் கண்டு பிடித்த விடை சரி. நாம் பின்பற்றிய முறையும் சரி. இல்லையா? எவ்வளவு சுலபமாகப் போட்டு விட்டோம்!

ராஜாக் கதை

நே. சி. தெய்வசிகாமணி

பாழாய்ப் போன இந்தப் புது வீட்டில் ஒரு நிமிஷம் கூட இருக்க எனக்குப் பிடிக்கவில்லை. இந்த வீதிதான் சின்னச் சந்தாக இருந்தாலும், வீடாவது கொஞ்சம் பெரிய மாடி வீடாக, பார்க்க அழகாக இருக்கக் கூடாதா? சேச்சே! அப்பாவும் அம்மாவும் என்ன அவசரப்பட்டு இர்த வீட்டுக்கு 'அட்வான்ஸ்' கொடுத்து வந்துவிட்டார்கள்!

ஒரு முழு வீடு; குடித்தனக்காரர் யாரும் கிடையாது. வாடகை முப்பது ரூபாய்தான் என்றால், வீடு கிடைக்காத இந்தக் கஷ்ட காலத்தில் யார்தான் இந்த அவலட்சணம் பிடித்த வீட்டுக்குக் குடி வரமாட்டார்கள்!

ஒரு தனி வீடு, முப்பது ரூபாய் வாடகைக்கு, அதுவும் இந்தச் சென்னைப் பட்டணத்தில் என்றதும் அப்பாவுக்குத் தலை கால் தெரியவில்லை! அம்மாவுக்கு மட்டும் அரை மனசுதான்! 'தனி வீடாக இருந்தாலும், அப்பளம், வற்றல், ஊறுகாய் இவைகளைக் காய வைக்க ஒரு சின்ன மாடி கூட இல்லையே!' என்று அவள் கவலைப்படுகிறாள்.

அண்ணனோ, 'பணம் போட்டு வாங்கிய ரேடியோவை உபயோகப்படுத்த இந்தப் பாழும் வீட்டில் மின்சாரம் இல்லையே' என்று சதா முணுமுணுக்கிறான்.

எனக்கு மட்டும் அந்தக் கவலைகள் இல்லை. ஒரே ஒரு கவலைதான் இருந்தது. 'உல்லாசமாகப் பொழுது போக்க இந்த மன்'தான் சாகிப் சந்தில் ஒரு சிநேகிதன்கூட இல்லையே' என்பதுதான் என் கவலை.

* * *

அன்று சனிக்கிழமை. எனக்குப் பள்ளிக்கூடம் கிடையாது. காலைப் பலகாரம் சாப்பிட்டானதும் எனக்கென்று ஒழித்துக் கொடுக்கப்பட்டிருந்த ஓர் இருட்டறையில் உட்கார்ந்துகொண்டு என்னவெல்லாமோ யோசித்துக் கொண்டிருந்தேன்.

மணி பதினொன்று இருக்கும். அப்பா ஆபீஸுக்குப் போய்விட்டார். 'கிரிக்கெட் கிளப்'புக்குப் போன அண்ணனும் இன்னும் வரக் காணோம்! அம்மா வந்த புதிதில் எப்படித்தான் இதற்குள் பக்கத்து வீட்டு மாமியைச் சிநேகம் பிடித்தாளோ! பேசுவதற்கு அவள் அங்கே போய்விட்டாள்! நான் ஒருவனே வீட்டில் இருந்தேன்.

பொழுது போக எதையாவது எடுத்துப் படிக்கலாம் என்ற எண்ணத்துடன் புத்தக அலமாரியில் கையை விட்டேன். அப்போது, "அகோ, வாரும் பிள்ளாய்!" என்று என் பின்னுவிருந்து அசரீரி மாதிரி ஒரு குரல் கேட்டது.

ஐயையோ! அப்பொழுது நான் அடைந்த பயத்தையும் எனக்கு ஏற்பட்ட நடுக்கத்தையும் இங்கே எழுத முடியாது!

'வீட்டுக் கதவு உட்புறமாகத் தாளிடப்பட்டிருக்கிறது. அப்படி இருக்க, இது என்ன? ஒரு வேளை விக்கிரமாதித்தன் கதையில் வரும் வேதாளமோ? ஐயையோ, வேதாளமா?'

"தம்பீ, உன்னைத்தான்! பயப்படாதே! இங்கே வா. சிறிது நேரம் நாம் இருவரும் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருப்போம்!"

நான் சற்றுத் தைரியமடைந்து மெல்லத் திரும்பிப் பார்த்தேன். அங்கு வேதாளத்தையும் காணோம்; ஒன்றையும் காணோம்!

'என்ன இது ஆச்சரியமாக அல்லவா இருக்கிறது? ஒருவரையும் காணோமே!' என்று நினைத்தபடியே பயத்துடன் சுற்று முற்றும் பார்த்தேன்.

"அங்கெல்லாம் என் பார்க்கிருய்? இதோ பார், 'இந்த மேஜையடியில் சீட்டுக் கட்டில் இருக்கும் ஒரு ராஜா சீட்டைத் தவிர மேஜையடியில் ஒன்றையும் காணோமே!' என்று ஆச்சரியப்படுகிருயா? தம்பீ, ஆச்சரியப்படாதே. தைரியமாய் வா! மேஜையடியில் இருக்கும் நான்தான்—இந்த 'இஸ்பேட்' ராஜாதான் உன்னுடன் பேசுகிறேன். என்னடா இது, காகிதச் சீட்டுக் கூடப் பேசுமா என்று அதிசயப்படுகிருயா? உயிரில்லாத டெலிபோனில் உன்னுடன் யாராவது பேசினுல் ஆச்சரியப்படமாட்டேன் என்கிருய். ரேடியோ பாடி, கிராமபோன் கத்தினுல் ஆச்சரியப்படமாட்டேன் என்கிருய்! அப்படியிருக்க, இதற்கு மட்டும் என் இப்படி வாயைப் பிளக்கிருய்? சரி; பயம் தெளிந்ததா? இப்படி வா! என்னை மேஜைமேல் வை! உனக்கு ஒரு கதை சொல்லுகிறேன்!"

கதை என்ற உடனே பரபரப்புடன் ஓடிப்போய் அந்த 'இஸ்பேட்' ராஜாவை எடுத்துப் பயபக்தியுடன் மேஜைமேல் வைத்தேன்.

"கவனமாகக் கேள், தம்பீ! சுமார் இருபது வருஷங்களுக்கு முன் - அப்போது நீ பிறந்துகூட இருக்கமாட்டாய் - இந்த வீட்டில் ஒரு பைத்தியம் இருந்தது! பைத்தியம் என்ற உடனே நீ என்ன நினைப்பாய் என்று எனக்குத் தெரியும்! நீ நினைக்கிற மாதிரி இல்லை, அந்தப் பைத்தியம்! சதா சர்வ் காலமும் அந்த மனிதர்-அவர்தான் சோமுப் பிள்ளை-சாப்பாடு, தூக்கம் இவைகளை எல்லாம் பொருட்படுத்தாமல் சீட்டாடுவதைக் கண்டு எல்லாரும் அவருக்குச் சூட்டிய பட்டப் பெயர்தான் 'சீட்டுப் பைத்தியம்' என்பது.

"அவருக்கு ஒரே மகன். அசப்பில் பார்த்தால் உன்னைப்போலத்தான் இருப்பான். ஆனல் நீ கொஞ்சம் கறுப்பாய் இருக்கிருய். அவன் சிவப்பு. ராஜாமாதிரி இருப்பான். அவன் பெயரும் ராஜாதான்!

"சீட்டாடுவதில் பைத்தியமாகி விட்ட சோமுப் பிள்ளைக்கு நேரத்

தோடு வேலைக்குப் போகவேண்டுமென்ற உணர்ச்சியே போய்விட்டது. எத்தனை நாளைக்குத்தான் முதலாளி சும்மா இருப்பார்? ஒரு நாள் உத்தியோகத்திற்குச் சீட்டுக் கிழித்து அனுப்பிவிட்டார். அப்பொழுதாவது அந்த மனிதருக்குப் புத்தி வந்திருக்க வேண்டுமே! அதுதான் கிடையாது! 'உத்தியோகம் இருந்ததால் அல்லவா நேரத்தோடு போகவேண்டி இருந்தது? இப்பொழுது அந்தத் தொந்தரவு இல்லை. நம் இஷ்டம் போல் நினைத்த நேரமெல்லாம் சீட்டாடலாம்' என்று நினைத்தார் அவர்.

"ராஜாவுக்குஅப்பாவின்செய்கை பிடிக்கவில்லை. அப்பாவை நேரில் கேட்க அஞ்சினான். கேட்டால், 'நீ யாரடா, நேற்றுப் பிறந்த மொட்டைப் பையன்! எனக்குப் புத்தி சொல்ல வந்துவிட்டாயா?' என்று கோபத்துடன் அடிக்க வந்துவிட்டால்...! அடிக்குக்கூட அவன் பயப்படவில்லை. எப்படியாவது அப்பாவைத் திருத்த வேண்டுமென்று தீர்மானித்துவிட்டான்.

"ஒரு நாள் அப்பா சீட்டுக் கச்சேரியிலிருந்து திரும்பி வந்தார். அம்மாவைக் கூப்பிட்டுச் சாதம் போடச் சொன்னார். காசு இருந்தால்தானே சமைக்க முடியும்? அரிசிக் கடைக்காரனும் மளிகைக் கடைக்காரனும் கர்ண பரம்பரையைச் சேர்ந்தவர்களா, இனாமாகக் கொடுக்க? அப்பாவுக்கு ஆத்திரம் வந்துவிட்டது. அம்மாவை அடிக்கப் போனார்.

"அந்த நேரத்தில் ராஜாவுக்கு எப்படித்தான் அவ்வளவு துணிச்சல் வந்ததோ, தெரியாது! பேய் பிடித்தவர்கள் கூச்சலிடுவார்களே அந்த மாதிரி ஒரே கூச்சலிட்டான்.

"அவன் பிறகு, 'சீட்டாடும் பைத்தியத்தில் வேலையையும் போக்கிக்கொண்டீர்; பெண்டாட்டி பிள்ளையைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்ச்சியும் அற்றுப் போய்விட்டது. இந்த லட்சணத்தில் வேளை தவறாமல் உமக்குச் சோறாக்கி வைக்க இங்கு என்ன பணம் கொட்டிக் கிடக்கிறதா? அல்லது தோட்டத்தில் காய்த்துத் தொங்குகிறதா?' என்றான்.

"இத்தனை நாளாக அடக்கி வைத்திருந்த ஆத்திரமெல்லாம் ராஜாவுக்கு ஒன்றாகத் திரண்டு எரிமலையாகிக் கனல் கக்கியது.

"சோமுப் பிள்ளை பற்களை நறநறவென்று கடித்தார். 'என்ன, நீயா எனக்குப் புத்தி சொல்ல வந்துவிட்டாய்?' என்று சீறிக்கொண்டு எழுந்தார். என்ன செய்கிறோம் என்பதை மறந்து, சமையல்கட்டில் இருந்த கட்டை ஒன்றைத் தூக்கி ராஜாவின் மண்டை மேல் ஓங்கி அடித்தார்.

"அப்புறம் ராஜாவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். ஆஸ்பத்திரியில், 'எப்படி அடிபட்டது?' என்று ராஜாவைக் கேட்டார்கள். 'பரண் மேலிருந்த கட்டையை எலி உருட்டியதால் அது என் தலை மேல் விழுந்து விட்டது' என்று ராஜா பொய் சொன்னான். அதற்குப் பிறகு அவன் நெடு நேரம் உயிரோடு இருக்கவில்லை; இறந்துவிட்டான்.

"ஜெயிலுக்குப் போயிருக்க வேண்டிய சோமுப் பிள்ளை ராஜாவின் வாக்கு மூலத்தினால் தப்பினார். அவருக்கு இருந்த சீட்டுப் பைத்தியம் போய் நிஜமாகவே பைத்தியம் பிடித்துவிட்டது. ஊர் ஊராய் அலைகிறார் என்று கேள்வி" என்று மேஜைமேல் இருந்த சீட்டு, கதையை நிறுத்தியது. 'தடதட' வென்று யாரோ கதவை இடித்தார்கள். தூக்கத்திலிருந்து கண் விழித்தேன். ராஜாச் சீட்டையும் காணோம்; ராணிச் சீட்டையும் காணோம்!

"பட்டப் பகலில் என்னடா தூக்கம்! எவ்வளவு நேரமாகக் கதவை இடிப்பது?" என்று அம்மா திட்டினாள்.

ஆமையும் கழுகும்

ஓர் ஆமை கடற்கரையில் சுட்டுப் பொசுக்கும் வெயிலில் தத்தளித்துக்கொண்டு நின்றது. அப்பொழுது உல்லாசமாக சில பறவைகள் வானத்தில் பறந்து சென்றன. அவைகளைப் பார்த்த ஆமைக்கு மிகவும் பொறாமையாக இருந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் சில பறவைகள் அந்த மணலில் வந்து உட்கார்ந்தன. ஆமை அவைகளிடம் போய், "ஐயோ, நான் இங்கு இந்த வெயிலில் மாட்டிக்கொண்டு தவிக்கிறேனே. உங்களில் யாராவது எனக்கும் பறப்பதற்குச் சொல்லிக் கொடுக்கக் கூடாதா?" என்று முறையிட்டது. ஒரு கழுகு ஆமையின் அருகில் வந்து, "அப்பனே, வருந்தப்படாதே. நான் உனக்குப் பறப்பதற்குக் கற்றுத் தருகிறேன்" என்றது. ஆமையைக் கழுகு தன் கால் நகங்களினால் கௌவிப் பிடித்துக்கொண்டு பறக்கத் தொடங்கியது. போகப் போக மிக உயரத்தில் பறந்தது. ஆமைக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. ஆனால் கழுகு பிடியை நழுவ விட்டு விட்டது! ஆமை தலைதுப்புற ஆயிரம் கரணங்கள் போட்டபடி ஒரு மலையுச்சியை நோக்கிச் சொல்ல முடியாத வேகத்தில் விழுந்துகொண்டிருந்தது. "எனக்கு இது வேண்டியதுதான். இறக்கைகள் முளைத்து ஆகாயத்தில் பறந்து என்ன செய்யப் போகிறேன்? பூமியில் நகரக்கூட முடியாமல் என்னைவிட மோசமாக வெயிலில் வாடிக் கொண்டு எவ்வளவோ ஜீவராசிகள் இருக்கின்றனவே" என்று கதறியபடி அந்த மலையுச்சியில் மோதி இறந்தது.

—ஈசாப் கதை.

எறும்பின் கதை

விஜயா

ஒரு பெரிய காடு இருந்தது. அதை இரண்டு பாகங்களாக்கி இரு சிங்கங்கள் ஆண்டு வந்தன. ஒரு சிங்கராஜாவின் பெயர் கேசரி. மற்றொன்றின் பெயர் மிருகேந்திரன்.

திடீரென்று கேசரிக்கு ஒரு பேராசை உண்டாயிற்று. மிருகேந்திரன் மேல் படையெடுத்து அதைத் தோற்கடித்துத் தானே சக்கரவர்த்திப் பட்டம் கட்டிக்கொண்டு, அந்தக் காட்டையே ஆளவேண்டும் என்று எண்ணியது. உடனே தன் மந்திரியான நரியைக் கூப்பிட்டுத் தன் ஆசையைத் தெரிவித்தது. மந்திரியும் உடனே புறப்பட்டுப் போய்த் தன் ராஜ்ய மிருகங்களையெல்லாம் ஒன்று சேர்த்துக் கேசரி முன் கொண்டு வந்து நிறுத்திற்று.

கேசரி, "மந்திரியாரே, நம் படைப் பலம் எப்படி இருக்கிறது? எல்லாவற்றையும் சரியே கவனித்து எண்ணிப் பார்த்துச் சொல்லும்" என்றது. மந்திரி எல்லா மிருகங்களையும் வரிசையாக நிறுத்தி வைத்துச் சுற்றிப் பார்த்து வந்தது. இப்படிச் சுற்றிப் பார்க்கையில் மந்திரியின் கண்ணுக்கு மிருகங்களின் பக்கத்தில் கூட்டம் கூட்டமாக நின்ற எறும்புகள் தெரிந்தன. ஆச்சரியத்துடன் புருவங்களை நெரித்துக்கொண்டு, "இதென்ன, நீங்கள் எல்லோரும் எங்கே புறப்பட்டீர்கள்?" என்று வினவியது.

உடனே எறும்புகளின் முன் நின்ற சட்டெறும்பு, "ஏன், நாங்களும் போருக்குத் தயாராக இருக்கிறோம்" என்றது. இதைக் கேட்ட மந்திரியும் மற்ற மிருகங்களும் 'ஹோ'வென்று சிரித்துவிட்டன.

மந்திரி, "என்ன? நீங்கள் போருக்கா வருகிறீர்கள்? ஹஹ்ஹ ஹஹ்ஹா, ஐயோ பாவம்! உங்கள்

ராஜபக்தியைக் கண்டு ரொம்பச் சந்தோஷம். ஆனல் நீங்கள் போரில் நசுங்கிச் சாவது தவிர வேறு என்ன சாதிக்க முடியும்?'' என்றது.

உடனே எறும்புகளுக்கெல்லாம் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. "நாம் அரசனிடமே போய்க் கேட்போம்'' என்றன.

எறும்புகளெல்லாம் கேசரி ராஜாவிடம்போய்முறையிட்டன. "மகாப்பிரபு, நாங்களும் போருக்கு வருவதாய்ச்சொன்னதற்கு மந்திரியார் எங்களை ரொம்பவும் கேவலமாய்ப் பேசிவிட்டார். இப்போதும் அதற்காக நாங்கள் வருந்தவில்லை. இப்போது நீங்கள் ஒரு வார்த்தை சொன்னல் போதும். நாங்கள் புறப்படத் தயார்'' என்றன.

"பூ...எவ்வளவோ பலசாலிகள் இருக்கும்போது உங்களை என் நான் போரில் பலியிடவேண்டும்? நம் சேனையைப் பார்த்தீர்களா? சிங்கம், யானை, புலி, கரடி, பாம்பு முதலிய எவ்வளவோ பலசாலிகள் இருக்கையில் நீங்கள் போரில் வந்து என்ன செய்யப் போகிறீர்கள்? பேசாமல் போங்கள்'' என்று ஏளனமாய்க் கூறிவிட்டுப் போய் விட்டது கேசரி ராஜா.

எறும்புகளுக்கு ரோசம் தாங்கவில்லை. "இவர்களை ஒரு கை பார்த்துவிடுவோம். இவர்கள் எப்படி ஜயிக்கிறார்கள், பார்ப்போம்'' என்று கறுவிக்கொண்டே ஓர் இடத்தில் போய்க் கூடின.

எறும்புத் தலைவனை கொள்ளி எறும்பு எழுந்து மேடைமேல் நின்றது. "சகோதர சகோதரிகளே, இப்போது இந்தக் காட்டில் உள்ள எல்லாரும் நம்மை மதிக்காமல் கேவலமாய்ப் பேசிவிட்டார்கள். இருக்கட்டும்...இவர்களுக்குப் புத்தி கற்பிக்க வேண்டியது அவசியம். ஸ்ரீராமபிரான் அணைகட்டும்போது கேவலம் சிறிய பிராணிகளான அணிப்பிள்ளைகள் சிறு சிறு கற்களைக்கொண்டு உதவவில்லையா?'' இப்படி எறும்புத் தலைவன் சொல்லும்போது கரகோஷம் வானை முட்டியது.

எறும்புத் தலைவன் தொடர்ந்து, "இதுபோல் நாமும் நம்மால் ஆன சிறு உபகாரத்தைச் செய்வதில் நம் அரசனுக்கோ மற்ற மிருகங்களுக்கோ என் பிரியமில்லை? நம் பராக்கிரமம் இவர்களுக்குத் தெரியவில்லை. இதோ நான் இருக்கிறேன், கொள்ளி எறும்பு. என் போன்றார் கடித்தால் தேள் கொட்டியது போல் இருக்கும். கட்டெறும்பு வகையினர் கடித்தாலோ...அப்பப்பா...அவர்கள் உடம்பையே துளைத்துவிடும். சித்தெறும்புகள் கடித்தாலோ ஊசியால் குத்துவதுபோல் இருக்கும். இவ்வளவு சக்தி வாய்ந்த நாம் போருக்கு வரக்கூடாதென்று சொன்ன அவர்களை நாம் சும்மா விடுவதா? இப்போதே மிருகேந்திரனிடம் சென்று இங்கு கேசரி போருக்குத் தயார் செய்கிறன் என்று சொல்லி, அவன் பக்கத்தில் சேர்ந்துகொண்டு நம் தீரத்தைக் காண்பிப்போம்'' என்றது.

உடனே எறும்புகள் எல்லாம் புறப்பட்டு மிருகேந்திரன் ராஜ்யத்துக்குச் சென்றன.

மிருகேந்திரனிடம் சென்று எறும்புகள் எல்லாம் விஷயத்தைத் தெரிவித்தன. மிருகேந்திரன் தன் பிரஜைகளை ஒன்று கூட்டி ஆலோசித்துத் தானும் சைன்னியத்துடன் போருக்குத் தயாராயிற்று. அப்போது எறும்புகள் தாங்களும்

போருக்கு வருவதாய்க் கூறின. உடனே கேசரி சொன்னது போலவே சொல்லி மிருகேந்திரனும் அதன் பிரஜைகளும் 'ஹோ'வென்று சிரித்தன.

எறும்புகள் அவமானமும் துக்கமும் தாங்காமல் தவித்தன. எல்லாமாகத் திரும்பிப்போய் ஒரு மரத்தடியில் சேர்ந்தன. அங்கு போனதும் எறும்புத் தலைவன், "நண்பர்களே...இப்படியே நம்மை எல்லோரும் அவமதித்தால் நாம் சும்மா இருப்பதா? இந்த ராஜ்யத்தில் உள்ள நம் இனத்தாரை எல்லாம் உடனே இங்கு கூட்டி வாருங்கள்" என்று கட்டளை இட்டது.

உடனே பத்து எறும்புகள் எல்லாத் திக்கிலும் சென்று அந்த ராஜ்யத்து எறும்புகளையெல்லாம் ஒன்று சேர்த்தன. எறும்புத் தலைவன் மீண்டும் பேசத் தொடங்கியது.

"நம்மை அவமதித்த அவர்களை நம் காலில் விழும்படி செய்யவேண்டும். போருக்கு நாளைக் காலை இரு பக்கத்துச் சைன்னியங்களும் புறப்படும். அவை கூடும் இடம் பார்த்து நாம் போகவேண்டும். அங்குள்ள மரங்களில் எல்லாம் நாம் மொய்த்துக்கொள்ள வேண்டும். மற்றவற்றைப் பிறகு பார்க்கலாம்" என்றது.

அப்படியே எல்லா எறும்புகளும் மரங்களை மொய்த்துக் கொண்டன. போர் துவங்கியது. உக்கிரமான சண்டை. இருபக்கத்திலும் மிருகங்கள் காயமடைந்தன.

எறும்புத் தலைவன், "ஏ, கட்டெறும்பாரே...போய் உங்கள் கைவரிசையைக் காட்டுங்கள்!" என்று கட்டளையிட்டது. கட்டெறும்புகள் லக்ஷக் கணக்கில் மரத்தைவிட்டு இறங்கி மிருகங்க



ளின் காயத்தில் கடித்துத் துளைத்தன. யானைகளின் காதுகளில் சிற்றெறும்புகள் நுழைந்தன. மிருகங்கள் வலி தாங்காமல் தவித்தன. அவைகளுக்கிருந்த வலியில் எதிரி யார், தன் பக்கத்தவர் யார் என்பதே தெரியாமல் ஒன்றையொன்று தாக்கின. இதைக் கண்டு கேசரியும் மிருகேந்திரனும் ஆச்சரியப்பட்டன. அவைகளுக்கு எறும்பு கடிப்பது தெரியவே இல்லை.

இந்தச் சமயம் கொள்ளி எறும்புகள் கோடிக்கணக்கில் மரத்திலிருந்து இறங்கி வந்து கேசரி மீதும் மிருகேந்திரன் மீதும் மொய்த்துக்கொண்டன. தேன்

பெரியவர்: ஏ, தம்பி, உங்கப்பா இரண்டு ரூபாய் பணம் வேணும்னு கடிதம் கொடுத்திருக்கிறது சரிதான். ஆனால், அது உங்கப்பா கையெழுத்துத் தான்னு எப்படி நம்பறது?

பையன்: ஹூம். அப்படியெல்லாம் நினைக்காதீங்க, ஸார். எங்கப்பா கையெழுத்தை வேணு போட்டுக் காட்டறேன். பார்த்துக்கோங்க! —ராதா, சென்னை-4.

கொட்டுவதுபோல் எல்லாமாய்ச் சேர்ந்து உடம்பு பூராவும் கடித்தன. சிங்க ராஜாக்கள் கடுப்பு வலி தாங்காமல் உருண்டு புரண்டன. இதில் சில எறும்புகள் நசுங்கின. இருந்தும் எறும்புகள் அதற்கெல்லாம் அஞ்சவில்லை.

எறும்புகளினால் ஏற்பட்ட உபாதை தாங்காமல் தங்கள் சைன்னியத்தின் மேலேயே பாய்ந்தன. காயம்பட்ட மிருகங்கள் கட்டெறும்புகளால் துளைக்கப்படுகின்றன என்பதை அறியாத சிங்கங்கள், தங்கள் பிரஜைகளே தங்களுக்கு எதிரியாக மாறிவிட்டதாய் எண்ணின. அதனால் அவைகள் மேலேயும் பாய ஆரம்பித்தன. ஒரே குழப்பம்; ரகளை.

மிருகங்கள் தங்கள் அரசர்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாக எண்ணிப் பயந்துபோய், திக்குக்கு ஒன்றாய் ஓடின. கடைசியில் போர்க்களத்தில் மிஞ்சியவை இரு சிங்கங்களே!

இரண்டும் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தன. கொள்ளி எறும்புகளின் கடி தேள் கொட்டுவதற்கு மேலாக வலி எடுத்தது. வேதனை தாங்காமல் தவித்த சிங்கங்களைச் சிறிது நேரம் வேடிக்கை பார்த்துவிட்டு எறும்புத் தலைவன், "ஏ ராஜாக்களே, இப்போது யார் ஜயித்தீர்கள்? யாருக்குச் சக்கரவர்த்திப் பட்டம்? எங்கே, எங்களைப் பார்த்துச் சொல்லுங்கள்" என்று பரிகாசமாய்க் கேட்டது. எறும்புகளெல்லாம் 'கொல்'லென்று சிரித்தன.

அப்போதுதான் எறும்புகளெல்லாம் போர்களத்துக்கு வந்திருந்தது அந்தச் சிங்கங்களுக்குத் தெரிந்தது. தங்கள் மிருகங்கள் தங்கள் படைமேலேயே சண்டையிட்டதன் காரணம் விளங்கியது. போதாததற்குத் தாங்கள் பட்ட கஷ்டமும் போதும் போதும் என்றாகிவிட்டது.

அதனால் இரு சிங்கங்களும் அந்த எறும்புகளின் எதிரில் சேர்ந்து வந்து மன்னிப்புக் கேட்டன. "சிறு பிராணிகள் என்று இனி யாரையும் அவமதிப்பாக நடத்த மாட்டோம். எங்களுக்கு நல்ல பாடம் கிடைத்தது" என்றன.

உத்திதபாதாஸனம்

டி. வி. திரிவேதி

[சென்ற இதழில் புஜங்காஸனம் என்ற பயிற்சி தவருக வெளியாகிவிட்டது. இதுவே சரியான பயிற்சி. ஆ-ர்.]



1. மல்லாந்து படுத்துக்கொள்ளுங்கள். கைகளும் கால்களும் நேராக இருக்கவேண்டும்.



2. உள்ளங் கைகளைப் பூமியில் படியவைத்து, கால்களை நேராக மேலே தூக்கவேண்டும். பூமிக்கும் கால்களுக்கும் 45 டிகிரி இருக்கவேண்டும்.



3. பிறகு மெதுவாகக் கால்களைக் கீழே கொண்டு வந்து பூமியில் படாமல் நிறுத்தி, மறுபடியும் படம் 2-இல் உள்ளபடி நாலைந்து தடவை செய்யுங்கள். இதனால் வயிற்றுக்கும் கால்களுக்கும் நல்ல பயிற்சி ஏற்படுகிறது.

விபரீதகரணி



1. படம் 1-இல் உள்ளபடி செய்யுங்கள். இரண்டு கைகளையும் இடுப்புக்கு அடியில் வைத்துக் கால்களைத் தூக்கவேண்டும். பூமிக்கும் காலுக்கும் 90 டிகிரி இருக்கவேண்டும். முக்கியமாய் அடி வயிற்றுக்கும் கால்களுக்கும் நல்ல பயிற்சி. யானைக்கால் வீக்கத்தைத் தடுக்கவும் நல்ல பயிற்சி இது.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(D) 132. தண்டபாணி, கோயம்புத்தூர். 133. தேவராஜன், T., சென்னை-4. 134. தசரதன், ராஜாம்பாள், ராஜகோபாலன், K., நாவலப்பிட்டியா. 135. தேவகி, P., சென்னை - 4. 136. தெய்வநாயகம், பாலகிருஷ்ணன், சந்திரசேகரன், A., மதுரை. 137. தண்டபாணி, G. B., பாலக்காடு. 138. தண்டாயுதபாணி, G., குளித்தலை. 139. தயாவதானி. இலங்கை. 140. துரைராஜன், T. J., தர்மபுரி. 141. தக்ஷிணமூர்த்தி, G., சென்னை - 15. 142. துரைராஜு, V. K., வேலாயுதம்பாளையம். 143. தக்ஷிணமூர்த்தி, R., சென்னை-15. 144. தர்மலிங்கம், கொழும்பு - 13. 145. துரைசாமி, மாணிக்கம், சரஸ்வதி, திருவாரூர். 146. தாமோதரன், P., நாகர்கோவில். 147. தீனதயாளன், R., சென்னை - 4. 148. கலாநிதி, யாழ்ப்பாணம். 149. தண்டபாணி, விக்கிரவாண்டி. 150. தேவராஜன், (விலாசம் எழுதவில்லை). 151. துரைராஜா, இலங்கை.

(G) 183. கணேசன், வைத்திலிங்கம், சண்முகம், T. M., தாரமங்கலம். 184. ஞானசௌந்தரி, A., தொழுதாவூர். 185. கோபாலகிருஷ்ணன், R., சென்னை-4 186. கோவிந்தராஜு, முனிராஜம்மாள், M., செங்கோட்டை. 187. கோவிந்தராஜு, A., பெங்களூர். 188. கோவிந்தராஜன், சீனிவாசன், S. S., சென்னை-7. 189. கங்கா, T. P., சென்னை-6. 190. கோபாலன், L., கும்பகோணம். 191. ஞானசேகரன், P. P., சிக்கல். 193. ஞானகிரி, தியாகராஜன், உசிலம்பட்டி. 194. கோபாலன், R., சென்னை-4. 195. கோபால், சுப்பிரமணியன், பக்தவத்சலம், N., நம்மாள்வார்பேட்டை. 196. குருசாமி, S. M., சங்கரன்கோயில். 197. குருசாமி, சந்திரமௌலி, V., மாயூரம். 198. கணபதிசுப்பிரமணியன், S., திருத்துருப்பூண்டி. 199. கோவிந்தராஜு, பார்த்தசாரதி, லோகநாதன், R., திருவள்ளூர். 200. கோபாலகிருஷ்ணன், N., சென்னை-17. 201. கோபாலன், ரமணன், R., சென்னை-4. 202.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி ....

(தேதி, மாதம், வருஷம்)

ஆகஸ்ட், 1-'53 கூபன் நெ:

கணேசன், N., கும்பகோணம். 203. கோபாலகிருஷ்ணன், R., பெரியநாயக்கன்பாளையம். 204. கணேசன், சீனிவாசன், சோமேஸ்வரன், சம்பூர்ணம், R., பெங்களூர்-3. 205. கணபதி, R., சட்டநாதபுரம். 206. கோபாலன், முத்துராஜ், K., வண்ணூர்பேட்டை. 207. கோவிந்தராஜன், G., சென்னை-5. 208. கோபாலன், சியாமளா, சாந்தா, மாலதி, ராதா, சரஸ்வதி, A., சென்னை-4. 209. கணபதி, R., சென்னை-4. 210. கோவிந்தராஜுலு, S., சென்னை-4. 211. கோபாலன், நாராயணன், S., சென்னை-1. 212. கணேசன், L. S., திருச்சி. 213. கணபதி, V., கோயம்புத்தூர். 214. கோவிந்தராஜுலு, P., எடப்பாடி. 216. கோவிந்தராஜலு, S., சென்னை-4. 217. கோவிந்தன், G. N., திருச்சி.

★★★★★★★★★★★★★★★★

கண்ணன்

கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய மாதத்துக் கூபன்களும்தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★★

218. காந்திஜி ஞாபகார்த்த சங்கம், பட்டுக்கோட்டை. 219. காந்திமதி, லக்ஷ்மி, R., பெங்களூர்-1. 220. கோபாலன், K., பம்பாய்-19. 221. கோபாலகிருஷ்ணன், P., கல்கத்தா. 222. கோபாலராமன், C. B., சென்னை-7. 223. கோபாலன், R., சென்னை-4.

(H) 34. ஹாஜா மொகைதீன், A. P. N., கூத்தாநல்லூர். 35. ஹனுமந்தராவ், T. N., சென்னை-5. 37. ஹரிஹரன், R., சென்னை-4. 38. ஹரன், R. K., திருப்பதீஸ்வரம். 39. ஹரிஹரன், கிருஷ்ணமூர்த்தி, R., ஏனங்குடி. 40. ஹரி, பாலன், நடராஜன், R., சென்னை-19.

J. 169. ஜனகம், ஆண்டாள், ராமாநுஜம், P., ஸ்ரீவில்லிப்புத்தூர். 170. வைத்திநாதன், சாந்தா, மைதிலி, மரகதம், L. N., சென்னை-4. 171. ஜனார்த்தனன், சுதர்சன், T. K., திருச்சி. 172. ஜானகி, P.S., ஜாம்ஷெட்பூர். 173. ஜகதீசன், N.V., சென்னை-4. 174. ஜகதீசன், M. K., முசிறி. 175. ஜமால் அமீன், A.J., கீழக்கரை. 176. ஜயலக்ஷ்மி, P., திருச்சி. 177. ஜைனத் அமீன், K.M., கூத்தாநல்லூர். 178. ஜனார்த்தனன், P. K., சென்னை-11. 179. ஜரிம்பாய், திருச்சி. 180. ஜகபதி ராஜு, C.S., சென்னை-4. 181. ஜோவி, S., சிலோன். 182. ஜான் தேவதாஸ், திருச்சி. 183. ஜகந்நாத், நாகேஸ்வரன், T.S., மதுரை. 184. ஜயகோபால், L. S., ஈரோடு. 185. ஜயமணி, கமலம், K.S., நாகபுரி. 186. ஜோதிர் மகாலிங்கம், கரூர்.

(அடுத்த இதழில் தொடரும்)

மாஸ்டர் பாலகுமார்
கதை: ஆர்வி சித்திரம்: ஸாமி
மாஸ்டர் பால குமார் என்றால் பச்சைக் குழந்தைக்குக்கூடத் தெரியும். நம் கதை நிகழ்ந்த சமயத்தில் பத்தே வயது நிரம்பிய அவன் ஸினிமாவில் பிரபல பால நக்ஷத்திரமாக விளங்கினான்
பாலகுமார்
அவன் நடிக்கும் படம் என்றால் மாலையிலிருந்தே......
எங்கள் படத்தில் நடிக்க லக்ஷ ரூபாய் தருகிறோம்
பாலகுமாருக்காக எழுதிய கதை. ஏழைப் பாத்திரம்...
அவனே ஹீரோ!
எங்கள் சர்க்கஸ் வீரன் படத்தில்...
எனக்குச் சர்க்கஸ் படத்தில் நடிக்க ஆசை, அம்மா!
புலிசிங்கத்துடன் நடிப்பதா! ஆபத்து!
கவலைப் படாதே அம்மா ஒரு நாளைக்கு ஒரு படமாக நடிக்கிறேன். கூடவே என் படிப்பையும் விடமாட்டேன்!
சரி, சர்க்கஸ் படத்தில் மட்டும் நடிக்க வேண்டாம்.
காலையில்
நடுப்பகலில்
மாலையில்
இரவில்
இதில் ஒரு கை எழுத்து
என்ன படங்களில் நடிக்க விரும்புகிறாய்? எவ்வளவு ரூபாய் வாங்குகிறாய்?
இதில் ஒரு கை எழுத்து
உன் வயது என்ன?
பாலகுமாருக்குப் பதில் சொல்லி அலுத்துப்போகும். கையெழுத்துப் போட்டுக் கை ஒடிந்துபோகும். சாதாரணமாகத் தானும் இருந்திருக்கக் கூடாதா என்று எண்ணுவான். ஒரு சமயம்....
அம்மா! இந்த வாழ்க்கை சிறை வாசம் மாதிரி இருக்கே.... நானும் மற்ற பையன்கள் மாதிரி இருந்தால் என்ன?
அதெப்படி முடியும் பாலா! உன்னைப் பார்த்தாலே கூட்டம் கூடி விடுமே!
சர்க்கஸ் வீரன் என்ற படத்தில் நடிக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டாய்! இன்று வெறுமே சர்க்கஸ் பார்க்கப் போகலாமே!
டிரைவர்! காரை எடுத்துவா! யூரோப்பியன் சர்க்கஸுக்குப் போகணும்!
சரிங்க, அம்மா! கார் ரெடி!
உம்...
அம்மா! என் படம் ஒட்டாத சுவரையே காணுமே!
அதோ! பால குமார்
கிரேட் யூரோபியன் சர்க்கஸ்

வழி! வழி!
இப்படி வழி மறித்தால் எப்படி போவது?
நம் சர்க்கஸ்வீரன் படத்தில் நடிக்க மறுத்தவர்கள் தானே இவர்கள்?
ஆமாங்க!
இவர்களுக்குச் சரியான வழி வைக்கணும்!
கையெழுத்து இல்லாமல் போக மாட்டோம்!
நீ தான் தலைவன்
நான் என்ன தலைவன? என் கையெழுத்து எதற்கு?
பாலா! அதோ முதல் மணி! ஜல்தி வா!
சரீங்க!
டேய், மங்க்கி மாஸ்டரைக் கூப்பிடு!
இதற்கு ஒரு பிளான் போட்டு வேண்டியதைச் செய்! என்ன, முடியுமா?
ப்பூ- இதானு பிரமாதம்!
டேய் குள்ளா! போய் நீயும் ஒரு கையெழுத்து வாங்குடா!
சரி மாஸ்டேர்
ஆமாண்டா!
சர்க்கஸ் குள்ளண்டா!
இங்கே ஒன்னு!
பேஷ்! சரி கையெ முத்துக்கு மேல் நான் சொல்வதை எழுது!
தொடரும்

நங்கபுரத்தின் மூலைமுடுக்குகளிலெல்லாம் இதே பேச்சுத்தான். அசட்டுப் பிச்சுவின் அற்புதச் சாகஸத்தைப் பற்றிப் புகழாதவர் இல்லை; போற்றாதவரில்லை. பிரிஞ்ஜால் ஸ்ரீகாந்த்கூடப் பொறாமையை மறந்துவிட்டு அவனோடேயே பழி கிடந்தான் என்றால், வேறு என்ன வேண்டும்?

அசட்டுப் பிச்சு இதையெல்லாம் பார்த்துவிட்டுத் தனக்குள்ளாகச் சிரித்துக்கொண்டான். தன்னைப் போன்ற ஒரு கோழை வேறு ஒருவரும் இல்லை என்பது அவனுக்கே தெரியாதா?

அவன் ஸ்ரீகாந்திடமும் டைகர் மணியிடமும், “நான் ஒன்றுமே செய்யவில்லைடா! சிலையருகில் போய் உட்கார்ந்தேன். கடைசியில் என்னடா என்றால், எல்லாம் நானே கண்டுபிடித்தேன் என்கிறார்கள்!” என்றுகூடச் சொல்லிப் பார்த்தான்.

பிச்சு அடக்கமாகப் பேசுவது போல் பெருமை பீற்றிக் கொள்வதாகவே ஸ்ரீகாந்த் எண்ணினான்.

ஐயனார் கோயிலில் பிடிபட்ட முரடன் பிரபல கொள்ளைக்காரன் தங்கவேலு என்பது வெளியாயிற்று. அவனே கிரீன்லண்ட்ஸ் ஹோட்டலில் போலீஸ் இன்ஸ்பெக்டர் வேஷத்தில் வந்தவன் என்பதும் வெளியாயிற்று. என்ன செய்தும் அவனுடைய கோஷ்டியாரைப்பற்றி அவன் தகவல் எதுவும் தெரிவிக்க மறுத்துவிட்டான்.

இவ்வளவு பிரபலமான ஒரு பழைய கொள்ளைக்காரனை ஒரு பையன் கண்டுபிடித்துவிட்டானே! ஊராருக்கு இதுதான் வியப்பு!

ஆனால் அசட்டுப் பிச்சுவுக்கே ஒரு விஷயம் கலக்கமாக இருந்தது. அந்த நோட்டுக்கள் அவனுடைய பையில் எப்படி வந்தன? அவனுக்குத் தன் தவறு தெரியவில்லை. முருங்கை மரத்தடியில் சட்டையை மாற்றும்பொழுது நோட்டுக்களை மேல் பையில் வைத்துக்கொண்டான். கால் சட்டைப் பையில் கணக்குத் தாள் கனமாக இருந்தது. அதுதான் ரூபாய் நோட்டுக்கள் என்று தவறாக எண்ணிக்கொண்டு புளியந்தோப்பில் அதைக் கட்டி வைத்துவிட்டான்! இதை அவனே அறியவில்லை.

இன்ஸ்பெக்டர் குரூப் அவனை வானளாவப் புகழ்ந்தார். பங்களாவில் மாயமாய் நுழைந்து, நோட்டுக்களை மர்மமாகக் களவாடிச் சென்றவனிடமிருந்து அசட்டுப் பிச்சு

நோட்டுக்களை மீட்டது பெரிய சாகஸம் என்று கொண்டாடினார். அதை விடப் பெரிய சாகஸம் அந்தத் திருடனைக் கைப்பிடியாகக் காவல் காத்து வந்தது என்று சொல்லிச் சொல்லிப் பாராட்டினார். உயிரைத் திருணமாக மதித்து, புத்தி கூர்மையுடன் நடந்து கொண்ட அவன் சாதாரணப் பையன் அல்ல; ஒருபெரிய பாலமேதை என்றே தலையில் தூக்கி வைத்துக்கொண்டு புகழ்ந்தார். ஊராரும் அவ்விதமே எண்ணினார்கள்.

போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வெற்றி வீரனாக அசட்டுப் பிச்சு வீட்டுக்குத்திரும்பிய காட்சி, கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஒரே ஜே கோஷமும் கூட்டமுமாக இருந்தது. மாணிக்கம் லீடராகக் கூட்டத்தை நடத்தி வந்தான். டைகர் மணி கோஷம் போட்டு வந்தான். கீச்சு மூச்சு லோகு தொண்டை கிழியக் கோஷத்தை வாங்கிக் கத்தினான். மதகடியிலிருந்து இரவே ஓடி வந்து விட்ட குடுமி வைத்திக்குத் தன்னையே இவ்வளவு பேரும் பாராட்டுவதுபோலிருந்தது. பிரிஞ்ஜால் ஸ்ரீகாந்த்துக்குக் கூட்டத்தை விட்டுப் போகவும் மனமில்லை; கூட்டத்தில் வெறி பிடித்ததுபோல் கத்தவும் மனமில்லை.

மண்டிக்கடை ஐயாசாமி பெருமையினாலும் சந்தோஷத்தினாலும் மூச்சு அடைக்க, "பி.... பி..பி..பி..பி..பிச்சு!" என்று 'பீப்பி' வாசித்துக் கொண்டிருந்தார். அவர் கையில் அசட்டுப் பிச்சு எஸ். எஸ். எல். ஸி. யில் தேறிய ரிஸல்ட் வேறு இருந்தது.

* * *

அசட்டுப் பிச்சு திருச்சி போய், காலேஜில் சேருவதாக இருந்தான். அதற்கு ஒரு மாதம் இருந்தது. ஆனாலும் நங்கபுரம் ஹைஸ்கூலில் அவன் பெயர் அடிபடாத நாளே இல்லை.

பள்ளிக்கூடத்தில் பேனாவைக் காணோம், சைக்கிளைக் காணோம், குடையைக் காணோம் என்றால் உடனே அசட்டுப் பிச்சுவின் பெயர் அடிபடும். "அவனிடம் சொல்லி விடுவேன்" என்று சொல்லி விட்டால் போதும்; அன்று மாலை

குள் கெட்டுப்போன பொருள் வைத்த இடத்துக்கு வந்துவிடும்.

புகழேணியில் ஏற ஏற எவனுக்குமே ஒரு புதுச் சங்கடம் ஏற்பட்டு விடுகிறது. பலர் வந்து தொல்லை கொடுக்கத் தொடங்கி விடுகிறார்கள். ஓய்வு, ஒழிவு என்பதே இல்லாமல் போய்விடுகிறது. பலர் அவன் உதவியை நாடினார்கள். அசட்டுப் பிச்சுவோ, பாவம், எதுவுமே தெரியாத அப்பாவி. அவன் அப்பாவித்தனமாக ஏதாவது பதில் சொல்வான். ஆனால் வருபவர்களுக்கு அதுவே பெரிய ஹாஸ்யமாக இருக்கும். அந்தப் பதிலிலே ஒரு பெரிய உண்மை எங்கேயோ மறைந்து கிடப்பதாகத் தோன்றும்.

ஒரு சமயம் பிச்சு நண்பர்களோடு இருந்தபோது குடுமி வைத்தி இரைக்க இரைக்க ஓடிவந்தான். "அடே பிச்சு! எங்க வீட்டு ஈயத் தவலையைக் காணோமடா!" என்று முறையிட்டான்.

"காணோமா? போ! போய் உங்க வீட்டுக் கொல்லையிலே இருக்கிற குட்டையிலே போய் முழுகு!" என்றான் அசட்டுப் பிச்சு, எரிச்சல் தாங்கமாட்டாமல்.

என்ன ஆச்சரியம்! அவன் சொன்னதை வேதவாக்காக எடுத்துக்கொண்டு போன குடுமி வைத்தி அரை மணியில் திரும்ப ஓடிவந்தான்.

"பிச்சு! நீ தெய்வந்தாண்டா! நான் போய் குட்டையிலே முழுகப் போனேன்! என்ன அதிசயம்! உனக்கு எப்படித் தெரிந்தது? என் காலில் என்னமோ இடித்தது. என்னடாவென்று பார்த்தால், ஈயத்தவலை!" என்று அதிசயம் தாங்காமல் வர்ணித்தான்.

அவன் பாட்டி ஈயத் தவலையின் கரியைப் போக்க அதைக் குட்டையில் ஊறப் போட்டிருந்தாள். அதை அடியோடு மறந்துவிட்டு அவளும் கூடவே வீடெல்லாம் தேடினாள். இதுதான் நடந்த விஷயம். ஆனால் அசட்டுப் பிச்சு குருட்டுத்தனமாக எரிச்சலுடன் சொன்னாலும் புகழ் அவனை விட்டால் தானே!

"அவன் ஒரு ஜீனியஸ்டா!" என்றான் ஒருவன்.

"இல்லேடா; ஏதோ மந்திர சக்தி இருக்குடா!" என்றான் இன்னொருவன்.

இப்படிப் பலர் பலவிதமாக அவனைப்பற்றிப் பேசிவந்தார்கள்.

ஒரு நாள் மண்டிக் கடையில் அசட்டுப்பிச்சு பொழுது போகாமல் உட்கார்ந்துகொண்டிருந்தான். அப்போது டெலிபோன் மணி ஒலித்தது.

"ஹலோ! நான்தான் இந்தோ விலோன் பாங்க் மானேஜர் பேசறேன். ஏ. பி. இருக்கானா?"

"ஏ. பி.தான் பேசறேன்!"

"இன்ஸ்பெக்டர் குரூப் இங்கே இருக்கிறார். உன்னை உடனே வரச் சொல்கிறார். ஒரு பெரிய சிக்கலான கேஸ்!"

அசட்டுப் பிச்சு, நடுங்கிக் கொண்டே, "எ..ன்..ன.. கேஸ்?" என்று குழறினான்.

"பெர்ரியா கம்பெனி காஷியர் இருப்பதையாயிர ரூபாய் மாற்ற வந்தார். அவர் பணத்தை எண்ணிக் கொண்டிருந்த போது, யாரோ இரண்டு பேர் பக்கத்தில் நின்று பேனாவுக்காக வாக்கு வாதம் செய்து கொண்டிருந்தார்களாம். ஒருவன் பேனாவைப் பிடுங்கினான். அதிலிருந்த இங்க்

கெல்லாம் காஷியர் முகத்திலும் சட்டையிலும் தெறித்தது. ஒருவன், 'ஸாரி' என்று அவர் முகத்தைத் தன் வேஷ்டியால் துடைத்து விட்டானாம். அவர் துடைத்துக்கொண்டு பார்க்கும் போது எண்ணிக்கொண்டிருந்த நோட்டுக் கத்தைகள் போன இடம் தெரியவில்லை. முகத்தைத் துடைத்தவனும் அப்படி இப்படிப் பார்ப்பவன் போல எங்கோ நழுவி விட்டான். இதுதான் விஷயம். உடனே கொஞ்சம் தயவு செய்து நீ வாயேன்..'' என்றார் மானேஜர்.

பிச்சு ரிஸீவரைக் கீழே வைத்த போது எதிரே ஓர் ஆள் வந்து அவன் கையில் ஒரு கவரைக் கொடுத்து விட்டுச் சென்றான்.



அசட்டுப் பிச்சுவுக்குத்தான் அது எழுதப்பட்டிருந்தது. அவசர அவசரமாகப் பிரித்தான். ''டேய் பொடிப் பயலே! உஷார்! எங்கள்

தலைவன் தங்கவேலுவைப் பிடித்துக் கொடுத்துவிட்டதாக எண்ணி இறுமாப்பு அடைந்திருக்கிறாய். இனி, எங்கள் விஷயத்தில் வாலாட்டினாயோ உன் தலையே போய்விடும். இந்தோ - விலோன் பாங்க் விஷயமாய் நீ தலையிடப் போவதாகத் தெரிகிறது. தலை ...த்திரம்! — தங்கவேலுக் ...காஷ்டி'' என்று அதில் எழுதியிருந்தது.

உண்மையில் அசட்டுப் பிச்சு இந்தச் சங்கடங்களில் மாட்டிக் கொள்ளவே விரும்பவில்லை. போதும் போதாததற்கு இந்தக் கடிதமும் வந்துவிட்டது. இனி அங்கே போக அவனுக்கு என்ன பைத்தியமா? கடிதத்தை மடித்துப் பையில் வைத்துக்கொள்வதற்கும் ஐயாசாமி வருவதற்கும் சரியாக இருந்தது. உடனே அவனுக்கு ஒரு யோசனை பளிச்சிட்டது:

''அப்பா, நான் காலேஜைப் பார்க்க இன்று திருச்சி போகிறேன். பணம் ஐம்பது ரூபாய் வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டே ரூபாயை எடுத்துக் கொண்டான். ஐயாசாமி பதில் சொல்வதற்குள் புறப்பட்டுப் போய் விட்டான்!

திருச்சி பிளாட்பாரத்தைப் பார்த்திருக்கிறீர்களா? அங்கே பூமிக்கடியில்தான் பாலம் இருக்கிறது. அதற்கு 'அண்டர் கிரவுண்ட் வே' என்று பெயர். பார்சல்களையெல்லாம் கீழேயிருந்து 'லிப்ட்' ஒன்றில் ஏற்றி மேல் பிளாட்பாரத்துக்குக் கொண்டு வருவார்கள். அதைப் பிச்சு இதற்கு முன் பார்த்ததில்லை. ஆகவே ஒரு நிமிஷம் அதை நின்று வேடிக்கை பார்த்தான்.

அப்போது, ''அதோ பிச்சுப் பயல் நிக்கிறாண்டோய்!'' என்று யாரோ சொல்வது கேட்டது. பிச்சு திரும்பிப் பார்த்தான். அவனுக்குத் தெரிந்த முகம் எதுவும் காணப்படவில்லை.

''கர்...ர்..ர்..'' என்று லிப்ட் இறங்கிக்கொண்டிருந்தது. கீழே பெட்டிகளும் சூட் கேஸ்களும் நிறைந்திருந்தன. பிளாட்பாரம் ஜகஜ்ஜோதியுடன் விளங்கியது. கெடியாரம் ஏழரை மணியைக் காட்டியது.

''அந்தப் பயல் நம்மைத்தான் தொடர்ந்து வந்திருக்கிறான்! ஜாக்கிரதை! நம்ப பிளான்படி நடந்து கொள்ளுங்கள்!'' என்று சத்தம் குகையிலிருந்து கேட்பதுபோல் மீண்டும் கேட்டது.

பிச்சுவுக்கு இதைக் கேட்டதும் கைகால்கள் எல்லாம் வெட வெட வென்று ஆட்டம் கண்டன. 'ஊரைவிட்டே வந்தாலும் நம்மைப் பிடித்த சனியன் துரத்திக் கொண்டு வந்துவிட்டதே!' என்று கலங்கலானான்.

'கர்..ர்..டங்..' என்று லிப்ட் மேலே வந்தது.

அவன் ஒரு போர்ட்டரைப் பார்த்து, ''இந்தப் பெட்டி, படுக்கைகளைக் கீழே கொண்டுபோகிறீர்களா?'' என்று விசாரித்தான்.

''ஆமாம்'' என்றான் போர்ட்டர்.

''கீழே எங்கே போகிறது?''

''கீழே பார்சல் ஆபீசுக்கு.''

''ஓகோ.. அதான் கேட்டேன்! இந்தா நாலணா! என்னையும் கொஞ்சம் கீழே இறக்கிக்கொண்டு போயேன். ரொம்ப ஆசையாய் இருக்கிறது!'' என்றான் பிச்சு.

[illegible] ஒரு முறை முழித்[illegible]: [illegible] இருக்கு, உடம்[illegible] போ, மரியாதையா!"

யாரோ பின்னால் தடதட வென்று ஓடினார்கள். அசட்டுப் பிச்சுவின் பயந்த கண்ணில் அப்போதுதான் அங்கிருந்த ஒரு பெரிய சூட்கேஸ் பட்டது. அது பூட்டப்படவில்லை.

ஆபத்துக் காலத்தில் பளிச் சென்று யோசனை தோன்றுவ தில்லையா? அவன் சுற்று முற்றும் பார்த்தான். யாரும் அவனைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. சட் டென்று பெட்டியைத் திறந்தான். இடம் நிறைய இருந்தது. அவன் அதற்கு மேல் யோசிக்கவில்லை. உள்ளுக்குள் சுருட்டி முடக்கிக் கொண்டு மேல் மூடியைப் போட்டு உள்புறமாக மூடிக்கொண்டான்!

'கர்...ர்ர்...டங்!' லிப்டு அந்தப் பெட்டியுடன் கீழே இறங்கியது. பிச்சுவோ உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பெட்டிக்குள் அடைபட்டுக் கிடந்தான்.

அரை மணி ஆயிற்று. பிச்சு மெல்லப் பெட்டியைத் திறந்தான். உள்ளே ஒரு டார்ச்சு விளக்கு இருந்தது அதை எடுத்துக்கொண்டு மூடியைத் திறந்து பார்த்தான். ஒருவரையும் காணவில்லை. அது எந்த இடம், எப்படி வெளியே போவது ஒன்றும் விளங்கவில்லை. என்ன செய்வது என்று புரியாமல் அவன் சிறிது தயங்கினான்.

அப்போது வெளிப் புறத்தில், 'டபார்' என்று ஒரு வெடியோசை கேட்டது. அவன் குலை நடுக்கத் துடன் டபக்கென்று ஆமையைப் போல் தலையை உள்ளுக்கு இழுத் துக்கொண்டான்! (தொடரும்)

உங்கள் சந்தேகங்கள்

E. ராஜாமணி, சைதாப்பேட்டை.

1. ராஜாஜிக்கும் நேருஜிக்கும் வயது என்ன?

ராஜாஜியின் வயது 74.

நேருஜியின் வயது 64.

2. இந்தியாவில் உள்ள சக[illegible] ரெயில்வேக்களின் மொத்த நீளம் எத்தனை மைல்கள்?

34,000 மைல்கள்.

சுமதி, கோயம்புத்தூர்

3. சென்னை மிருகக் காட்சிச் சாலையில் இருக்கும் அன்னம் தண்ணீரைப் பாலிலிருந்து பிரிக்குமா?

பிரிக்காது. கற்பனையிலும் காவியங்களிலுமே பிரிக்கும்!

ராஜம், மாயூரம்.

4. 3-டி பிலிம் என்றால் என்ன?

3-டி பிலிம் என்பது நடக்கும் காட்சியை அப்படியே தத்ரூபமாகக் கண்முன்னால் நடப்பது போலவே காட்டும் சினிமா. உதாரணமாக, இப்பொழுது பார்க்கும் சினிமாப் படங்களில் எல்லாம் அகலம், நீளம் மட்டும் தெரிகின்றன. அதுவும் தட்டையாகக் காட்சியளிக்கின்றன. இந்த 3-டி பிலிமில் கனபரிமாணமும் தெரிகிறது. சினிமாத் திரையில் மனிதன் நடந்து வந்தால் அவன் உனக்கு] நேர் எதிராக வருவது போலவே தோன்றும். அது தோற்றமாக இருந்தாலும்கூட நீ உன்னையும் அறியாமல் அவனுக்கு வழி விடுவதற்காக இடத்தை விட்டுக்கூட எழுந்துவிடுவாய்!

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் தபால்

உண்மை

அன்புச் சிந்தை இருந்திடில்
அமைதி யுண்டு வாழ்விலே
இன்பம் காண என்றுமே
ஈகை வேண்டும் நம்மிலே.
துள்ளு கின்ற உள்ளமே
தூய்மை கொண் டுழைக்கவே
பள்ளு நித்தம் பாடியே
பண்பு பெற்று வாழலாம்.
நோக்கும் திக்கு முழுதுமே
நேர்மை வாழ்வு பரவிட
ஊக்கமாக உண்மையை
உணர்வு கொண்டு போற்றுவோம்!

—ரு. துளசிதாஸ், மதுரை.

*   *   *

விடுகதை

போகாத இடமுமில்லை; பார்க்காத பொருளுமில்லை. சாகாமல் வாழ்கிறான்; சகலராலும் ஆகாத காரியத்தைச் செய்திடுவான்! கண்ணெதிரில் தெரியமாட்டான்! வாரி நற்பயனை வழங்கிடுவான் எவ்வுயிர்க்கும். உரைப்பீரோ அவன் யாரென்று?

விடை: காற்று —இரா. பரமசிவம், பண்ணுருட்டி.

*   *   *   *

என் ஆசை

1. என் வீட்டுக்கு அருகில் உள்ளது கம்பன்மேடு. கம்பன் மண் பானையைப் போட்டு உடைக்காமல் பொன் பானையாக உடைத்திருந்தால் எவ்வளவு பொன் சேர்த்திருப்பேன்! —ராதா, தேரெழுந்தூர்.

*   *   *

2

1   3

4

அதிர்ஷ்டசாலி யார்?

படத்தின் நடுவில் இருக்கும் மாம்பழத்தை அடைய முடியாமல் நால்வரும் தவிக்கிறார்கள். பாவம், அவர்களுக்கு வழி தெரியவில்லை. பழத்தை அடைபவன் அதிர்ஷ்டசாலிதான்!

விடை: 1 - ஆவது பையன்

Reg. No.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

புதிய கண்ணன் வெளியீடுகள்

வ ழ வ ல் லி

கி. ரா. எழுதியது

அது ஒரு தனி உலகம். அங்கே வசிக்கும் மனிதர்கள் எல்லாரும் விசித்திரமானவர்கள். பிராணிகளும் விசித்திர இயல்பு கொண்டவை. முத்துக்களும், நவரத்தினங்களும், பவழங்களும் விளையும் நாடு. அங்கே போய் எப்படியோ அகப்பட்டுக் கொள்கிறான் சுந்தரம். பாதி உடல் மனிதர்களைப் போலவும் பாதி உடல் மீனாகவும் இருந்த ராஜகுமாரி பவழவல்லியைச் சந்திக்கிறான். ஆமை ஒன்று அவனால் ஆகாத காரியத்துக்கெல்லாம் உதவுகிறது. பலவித சோதனைகளில் அகப்பட்டுக்கொண்டு, கடைசியாக ராஜகுமாரியைப் பார்க்க வருகிறான். அப்போது தான்,— மிகவும் சுவாரஸ்யமான கதை. அழகான படங்கள் நிறைந்தது.

விலை 12 அணா

வி ளை யு ம் ப யி ர்

கி. வா. ஜகந்நாதன் எழுதியது

நம்மிடையே வாழ்ந்த, வாழுகின்ற பெரியோர்கள் உங்களைப்போலிருந்த காலத்தில் எப்படி இருந்தார்கள் எப்படி விளையாடினார்கள்? எப்படிப் படித்தார்கள்? என்ன என்ன குறும்புத்தனங்கள் செய்தார்கள்? இதையெல்லாம் நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா? அவற்றிலிருந்து நாம் எவ்வளவோ அறிந்துகொள்ளலாமே. காந்திஜி, நேருஜி, டாகுர், பாரதியார், ராஜேந்திரப் பிரஸாத், ஆஸாத், டாக்டர் சாமிநாதையர் முதலிய பெரியார்களுடைய விளையாட்டுப் பருவத்து நிகழ்ச்சிகளைச் சுவைபட, கதைபோல ஆசிரியர் வர்ணிக்கிறார். அருமையான புத்தகம், அவசியம் படிக்கவேண்டிய புத்தகம்.

விலை 8 அணா

கண்ணன் அங்கத்தினர்களுக்குக் கமிஷன் உண்டு.

க ண் ண ன் கா ரி யா ல ய ம்

மயிலாப்பூர் :: :: சென்னை—4.

★ ★